பக்கங்கள் : பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 23 திங்கட்கிழமை (07.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 222

# கொழும்பின் கடல், வான் கண்காணிப்பு

# 'சார்க்' வேளை முற்றாக இந்தியாவிடம்!

## மன்மோகனின் பாதுகாப்புக்கு 100க்கும் குறைவானவரே வருவர்

கொழும்பு, ஜூலை 07

**இம்மாத இறுதியிலும் அடுத்தமாத முற்பகுதியிலும் கொழும்பில் 'சார்க்' உச்சி மாநாடு நடக்கும் வேளையில் தலைநகர் கொழும்பின் கடல், வான் கண்காணிப்பு நடவடிக்கைகள் முற்றாக இந்தியத் தரப்பின் பொறுப்பின் கீழ் முன்னெடுக்கப்படும்.**

**தரைப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மட்டுமே இலங்கை அரசுப் படைகள் தனித்து முன்னெடுக்கும்.**

**அதேசமயம், இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காகக் கொழும்பு வரும் இந்தியப் பிரதமருக்கும் ஏனைய மூத்த அதிகாரிகளுக்கும் உரிய பாதுகாப்பை வழங்குவதற்காக நூறுக்கும் குறைவான இந்தியக் கொமாண்டோக்களே - மெய்ப்பாதுகாவலர்களே - இலங்கை வருவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

இந்தியத் தரப்பின் பாதுகாப்புக்கு சுமார் மூவாயிரம் பேர் கொண்ட படையணி இந்தியாவிலிருந்து கொழும்பு வரப்போவதாக முன்னர் வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை என்றும் தெரிவிக்கப்பட்டது.

'சார்க்' சமயத்தில் தலைநகர் கொழும்பின் வான், கடல் கண்காணிப்பு நேரடியாக இந்தியப் பொறுப்பில் இருக்கும்.

**கொழும்புக்கு வெளியே இந்திய கப்பல்**

இதற்காகக் கொழும்புக்கு வெளியே கடலில் இரண்டு பாரிய இந்தியக் கப்பல்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டக்கச்சி வான் தாக்குதல் முதியவர் படுகாயம்; வீடுகள்சேதம்

வவுனியா, ஜூலை 7

கிளிநொச்சி மாவட்டத்தில், வட்டக்கச்சிப் பகுதியில் நேற்று விமானப் படையின் மிக்-27 ரக விமானங்கள் நடத் திய தாக்குதலில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். பொதுமக்களின் வீடுகள் பலவும் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வட்டக்கச்சியில் உள்ள மக்கள் குடியிருப்புகளை இலக்கு வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணியளவில் விமானப் படையின் மிக்-27 ரக விமானங்கள் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதலில் வட்டக்கச்சியைச் சேர்ந்த மணியம் செல்லத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்' பாதுகாப்புக்கு 25 ஆயிரம் துருப்புகள்

கொழும்பு, ஜூன் 07

கொழும்பில் நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டிற்கான பாதுகாப்பை வழங்குவதற்காக 25ஆயிரம் படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

'சார்க்' மாநாட்டுக்கான பாதுகாப்புகளில் 25,000 படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இராணுவம், கடற்படை, விமானப் படை, பொலிஸ்படை ஆகியவற்றில் இருந்து அதற்கானபடையினர்திரட்டப்பட்டு வருகின்றனர். இதற்கான பாதுகாப்பு ஒழுங்குகள் எதிர்வரும் 20ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாக உள்ளன. 'சார்க்' மாநாடு ஜூலை 26ஆம் திகதியில் இருந்து ஓகஸ்ட் 2ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் மிகப்பெரும் பாதுகாப்புஒழுங்கமைப்புஇந்தமாநாட்டுக்கே வழங்கப்படவுள்ளது எனப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 'மிக்-27' ஜெற் குண்டுவீச்சு விமானம் தரையிறங்கும் சமயத்தில் விபத்து!

### விமானி தப்பினார்: கட்டுநாயக்காவில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 07

விமானப்படையினரின் 'மிக் - 27' ரக குண்டுவீச்சு ஜெற் விமானம் நேற்று மாலை வன்னியில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தி விட்டு கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்துக்குத் திரும்பித் தரையிறங்கிய வேளை, 'ஓடுபாதையை விட்டு சறுக்கி - வழுக்கி - சென்று விபத்துக்குள்ளாகி சேதமடைந்தது.

எனினும் விமானி அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தார் என்று கூறப்படுகின்றது.

வட்டக்கச்சியில் நேற்றுப் பிற்பகல்

(14 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே**

**கல்விச்சுடர்**

7 ஆம் பக்கத்தில்:
க.பொ.த (உயர்தர)மாதிரி வினாத்தாள்
★ தமிழ் 01, பகுதி 1

8 ஆம் பக்கத்தில்:
★ தரம் - 5 மாணவருக்கான இலகுவழிப் பரீட்சை

## ஐ.தே.கட்சி சார்புத் தொழிற்சங்க உறுப்பினர்கள் 10 லட்சம் பேர் வியாழனன்று வேலைநிறுத்தத்தில்!

### அக்கட்சிப் பிரமுகர்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 07

அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கக்கோரி ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கங்கள் இந்த வாரம் வியாழக்கிழமை 10ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடத்தவிருக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு 400 இற்கும் மேற்பட்ட ஐ.தே.கட்சி சார்பு தொழிற்சங்கங்கள் ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளன.

இத்தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 10 லட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோச் சாரதியான இளைஞன் வீட்டுக்குச் சமீபமாக சுட்டுக் கொலை!

### அரியாலையில் நேற்று நண்பகல் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

அரியாலையில் நேற்று நண்பகல் 12.45 மணியளவில் இளைஞன் ஒருவர் ஆயுததாரிகளால் கலைத்துக் கலைத்துச் சுடப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த கோபாலசிங்கம் சதுர்முகன் (வயது-22) என்பவரே சுடப்பட்டவராவார்.

யாழ்.நீதிவான் இ.வசந்தசேனன் சம்பவஇடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

சொந்தமாக ஓட்டோ வைத்து தொழில்செய்யும் பிரஸ்தாப இளைஞன் நேற்று மதிய உணவுக்காக வீட்டுக்கு வந்தார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை- இந்திய எண்ணெய் அகழ்வு ஒப்பந்தத்துக்கு ஜே.வி.பி கடும் ஆட்சேபம்

கொழும்பு,ஜூலை. 07

மன்னார்க் குடாவில் எண்ணெய் அகழ்வில் ஈடுபடுவது தொடர்பாக இந்திய நிறுவனம் ஒன்றுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான ஒப்பந்தம் இன்று திங்கட்கிழமை கைச்சாத் திடப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

உத்தேச ஒப்பந்தம் தொடர்பாக ஜே.வி.பி, ஜனாதிபதிக்கு ஆட்சேப கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

எண்ணெய் அகழ்வு ஒப்பந்தம் தொடர்பாக ஆராய்வதற்கு அனைத்துக் கட்சிகளும் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்று ஜே.வி.பி. ஏற்கனவே வலியுறுத்தி இருந்ததாக அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் அமரகுமார திஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய—அமெரிக்க அணு ஆயுத ஒப்பந்தம்; மன்மோகன் இன்று புஷ்ஷை ஜப்பானில் சந்திக்கிறார்

புதுடில்லி, ஜூலை 7

அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் காங்கிரஸ் அரசு, அரசியல் வட்டாரத்தில் புதிய ஆதரவைப் பெற்றிருக்கும் நிலையில் பிரதமர் இன்று ஜப்பான் செல்கிறார்.

மூன்றுநாள் அரசு முறைப் பயணமாக செல்லும் பிரதமர் அங்கு அமெரிக்க அதிபர் புஷ்ஷை சந்திக்கிறார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்திப்பில் அணுசக்தி ஒப்பந்தம் குறித்து இருவரும் விவாதிக்கவிருக்கிறார்கள்.

அணுசக்கி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இருக்கும் உள்நாட்டுப் பூசல்களை களையுமாறு அமரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில் புதிய அரசியல் உறவுகளை பெற்ற புதுத் தெம்புடன் இந்தியா பேச இருப்பது அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் எனபரவலாக எதிர்பார்க்கப் படுகின்றது.

மத்திய அரசு அணுசக்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் முடிவை எடுக்கும் அடுத்த கணமே தமது ஆதரவு, வாபஸ் பெறப்ப

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் இரு அதிரடிப்படையினர் பலி

அம்பாறை, ஜூலை 7

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியில் புலிகளின் பொறிவெடியில் சிக்கி சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கேணல் ராம் தலைமையில் கிழக்கில் 200 வி.புலிகள் செயற்படுகிறார்கள்

கொழும்பு, ஜூலை 7

தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் ராம் தலைமையில் 200 விடுதலைப்புலிகள் கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதியில் இயங்கி வருவதாக ''லக்பிம'' ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

கிழக்கு மாகாணத்தை அரசு கைப்பற்றிய போதும் அங்கு முழுமையான நிர்வாகத்தை ஏற்படுத்த முடியவில்லை.

அம்பாறை மாவட்டத்தின் கஞ்சிக்குடிச்சாறு அடர்ந்த காட்டுப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

ஜூலை முதலாம் நாள் சிறிலங்கா அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவினை ஏற்றி வரச் சென்ற பெல்-412ரக உலங்குவானூர்தி மீது நடத்தப்பட்ட தாக்குதல் அங்கு நடைபெற்றுவரும் தாக்குதல்களின் பிந்திய தகவலாகும்.

அறுகம்குடா பாலத்தை திறப்பதற்குச் சென்ற அரச தலைவர், அமைச்சர்கள் மற்றும் இராஜதந்திரிகள் அடங்கிய குழுவினரின் தொடரணியில், தாக்குதலில் சிக்கிய உலங்குவானூர்தி பங்கு பற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

கஞ்சிக்குடிச்சாறுப் பகுதியின் அடர்ந்த காட்டுப்பகுதிகளுக்கு மேலாக பறந்த போதே உலங்குவானூர்தி தாக்குதலுக்கு உள்ளாகியது.

அவசரமாகத் தரையிறங்கிய உலங்குவானூர்தியின் எரிபொருள் தாங்கியில் நான்கு துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்த அடையாளங்கள் காணப்பட்டன. அதன் பின்னர் செங்காமம் பகுதியிலிருந்த சிறப்பு அதிரடிப்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல்களையும் நடத்தியிருந்தனர்.

கஞ்சிக்குடிச்சாறு காட்டுப் பகுதியில் இருந்து ஏவப்பட்ட 81மி.மீ மோட்டார் எறிகணைகள் நான்கு முகாம் பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன.

சில மாதங்களுக்கு முன்னர் கிடைத்த தகவலின் படி கேணல் ராம் தலைமையில் 200 விடுதலைப்புலிகள் கஞ்சிக்குடிச்சாறு காட்டுப்பகுதியில் இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது - என்று உள்ளது. (ப)

# ஊரடங்கு வேளையில் நடமாடிய ஐவர் சனியன்று பொலிஸாரால் கைது!

## இப்போது அவர்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 7

மூளாய், முன்கோடையில் ஊரடங்கு உத்தரவை மீறி 11 மணியளவில் நடமாடிய ஐந்து பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே போன்று மானிப்பாயிலும் ஒருவர் கைதானார். நேற்று முன்தினம் (ஐந்தாம் திகதி) இரவுஊரடங்கு நேரத்தில் நடமாடிய இவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

அவர்கள் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் நேற்று மாலை ஆஜர் செய்யப்பட்டனர். சம்பந்தப்பட்டவர் களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை -

மானிப்பாயிலும் நேற்று முன்தினம் ஊரடங்கு வேளையில் நடமாடிய ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரும் மல்லாகம் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டார். அவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

# நவாலி வர்த்தகர் வீட்டுக் கொள்ளை; மூவர் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 07

மானிப்பாய், நவாலிப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை வர்த்தகர் ஒருவர் வீட்டில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மூவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அன்று இரவு 12மணியளவில் கூரிய ஆயுதங்களுடன் வர்த்தகர் வீட்டுக்குள் நுழைந்த 25பேர் கொண்ட கோஷ்டி, வீட்டில் இருந் தவர்களை தாக்கி விட்டு அங்கிருந்து நகைகளும் பணமுமாக மொத்தம் 11லட்சத்து 75ஆயிரம்ரூபா பெறும தியைக்கொள்ளையடித்துச் சென்றமை தெரிந்ததே.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்திய பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் நேற்று மாலை ஆஜர் செய்யப்பட்ட போது, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-01)

# கனடாவில் ஒரு லட்சம் தமிழர்கள் 'பொங்கு தமிழ்' நிகழ்வில் திரண்டனர்

## ரொறன்ரோவில் கரும்புலி தினத்தில் வரலாறு காணாத எழுச்சி

ரொறன்ரோ, ஜூலை 07

கரும்புலி தினமான ஜூலை 5 ஆம் திகதி சனிக்கிழமை கனடாவின் ரொறன்ரோவில் டவுன் வியூ பூங்காத் திடலிலும் சுற்றாடலிலும் சுமார் ஒருலட்சம் ஈழத் தமிழர்கள் ஒன்று கூடி பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் திரண்டனர்.

குறுகிய கால முன்னறிவிப்பை ஏற்று, வரலாறு காணாதவாறு இவ்வாறு அதிரடியாக ஒன்று திரண்டதன் மூலம், அண்மைக் காலத்தில் ஈழத் தமிழர்கள் தொடர்பாகக் கனேடிய அரசு எடுத்த முடிவுக்கு கனடாவாழ் ஈழத் தமிழர்கள் தமது ஐக்கியப்பட்ட எதிர்ப்பை அமைதி வழியில் காட்டியிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அன்றைய தினம் கனடா வாழ் தமிழர்களின் அனைத்து நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன. தமிழ் மக்கள் பொங்கு தமிழ் நிகழ்வில் பங்கு பற்றுவதற்கு வசதியாகப் போக்குவரத்து ஏற்பாடுகளை அந்த நிறுவனங்கள் விசேடமாக ஒழுங்கு செய்து கொடுத்திருந்தன.

கனடாவிலிருந்து ஒளி - ஒலிபரப்பாகும் சகல தமிழ் ஊடகங்களும் தமிழ் மக்களின் உணர்வுகளைப் பொங்கிப் படைக்கும் உணர்வுபூர்வ நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்தன.

கனடாப் பிரமுகர்கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள் எனத் தமிழின உணர்வைப் பிரதிபலிக்கும் பலர் பொங்கு தமிழ் நிகழ்வில் உரை நிகழ்த்தினர். எழுச்சி இசை நிகழ்ச்சிகள், நடனங்கள் என்பனவும் இடம்பெற்றன.

இறுதியில் அங்கு 'பொங்கு தமிழ்' பிரகடனம் செய்யப்பட்டது.

அதில் கூறப்பட்டிருந்தவை வருமாறு:-

கனடாவாழ் ஈழத் தமிழர்களாகிய நாங்கள், இன்று இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வின் மூலம் -

உலக மக்கள் மன்றின் முன்னிலையில் நீதியான, நியாயபூர்வமான தமிழீழத் தாயக விடுதலைக்கு அங்கீகாரம் தந்து ஆதரிக்குமாறு எமது சக அனைத்துலக மக்களையும் மனித நேயத்தையும், அறத்தை மதிக்கும் உலக நாடுகளையும் குறிப்பாக எமது கனேடிய அரசையும் வேண்டுகின்றோம்.

கனேடியத் தமிழர் அமைப்பான 'உலகத் தமிழர் அமைப்பு' மீதான தடையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதனைக் கனேடியத் தமிழர் மீதான உரிமைப்பறிப்பாக நாம் கருதுகின்றோம். அத்தடையை உடன் நீக்குமாறு கனேடிய அரசை வேண்டுகின்றோம்.

ஈழத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வின் சமத்துவமான பங்காளிகளாக ஏற்று, அவர்கள் மீதான தடைகளை உடன் நீக்குமாறு அனைத்துலக சமூகத்தையும் - குறிப்பாக எமது கனேடிய அரசையும் - வேண்டுகின்றோம்.

மோசமான மனித உரிமை மீறல்களையும், மனிதாபிமானப் பிரச்சினைகளையும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள இலங்கை அரசின் மீது இராணுவ, பொருளாதார, இராஜதந் திரத் தடைகளை உடன் விதிக்குமாறு வேண்டுகின்றோம்.

விடுதலையே வாழ்வு என்றாகி விட்ட நிலையில், எமது உறவுகளின் விடுதலைக்காக முழுமையாக உழைப்போம். தமிழீழத் தேசியத் தலைமையின் கீழ் ஒன்று பட்ட மக்களாகத் தமிழீழம் காண்போம் என உறுதிகூறுகின்றோம். - என்று உள்ளது.


## அதிஷ்டலாபச்சீட்டிழுப்பு

இணுவில் பொதுநூலகம் சனசமூகநிலையத்தின் அபிவிருத்தி நிதிக்கான அதிஷ்டலாபச்சீட்டிழுப்பு 06.07.2008 (ஞாயிறு) மு.ப. 10 மணிக்கு இணுவில் பொதுநூலக முன்றிலில் நடைபெற்றது.

அதிஷ்டலாபச்சீட்டிழுப்பு இலக்கங்கள்

1ஆம் பரிசு 2701

2ஆம் பரிசு 0951

3ஆம் பரிசு 1457 (C)

ஆறுதல் பரிசுகள் :-1774, 1784, 887, 2645, 473

இணுவில் பொதுநூலகம்.


## சமய சந்நிதிகளில்

வலி தென் மேற்கு, ஜூலை 07

பிரான்பற்று முத்துமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

இந்த ஆலய பெருந்திருவிழா கடந்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. (203-135)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 07

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பற வெள்ளோட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப 3மணிக்கு நடைபெறவுள்ளது. (203)

* * *

நல்லூர், ஜூலை 07

கோண்டாவில் புவனேஸ்வரி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கு நடைபெறும். மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203-111)

* * *

பருத்தித்துறை சிவன் ஆலய தேர்த் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. மறுநாள் தீர்த்தத் திரு விழாவும் இடம் பெறும். (203-218)

# வேலணை வைத்தியசாலையில் உளவளச் சிகிச்சை

நல்லூர், ஜூலை 7

உளவளச் சிகிச்சை பெறும் நோயாளர்களின் வசதியை முன்னிட்டு வேலணை பிரதேச வைத்தியசாலை சனிக்கிழமைகளில் காலையில் மேற்படி சிகிச்சைகளை வழங்க யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாள வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்.போதனாவைத்திய சாலையைச் சேர்ந்த உளவள வைத்தியசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன் உட்பட வைத்திய அதிகாரிகள் சிகிச்சைகளை வழங்கவுள்ளனர்.

தீவகத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட நோயாளர்கள் இங்கு தமக்கு சிகிச்சைகளைப் பெற முடியும். (203-111)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்

ஆறுமுகம் இரத்தினகோபால்

முன்னர் பல ஆண்டுகள் எமது சங்கத்தின் உப தலைவராகவும், தலைவராகவும் சங்கத்தின் வளர்ச்சிக்காக நேர்மையாய் சேவையாற்றிய அன்னாருக்கு எமதுகண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவர் பிரிவால்வருந்தும் அவர் தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

காரைநகர் ப.நோ.கூ.சங்கம் (76090)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக முன்னாள் தலைவரும் சுப்பர் சூஸ் உரிமையாளருமான

திரு. இ.ஜெயராசா அவர்களின் அன்புத் தந்தையார்

ஆறுமுகம் இரத்தினகோபால்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இல 165,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி/553639) யாழ். வணிகர் கழகம்.

THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில

யாழ்ப்பாணம் , பிளாக் வீதி, சங்கானை.


# மரண அறிவித்தல்கள்

## பச்சைமுத்து வெற்றிவேலு

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பச்சைமுத்து வெற்றிவேலு நேற்று முன்தினம் (05.07.2008) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பச்சைமுத்து - வெற்றிவேலு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வரத்தினத்தின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், அருட்குமரன் (லண்டன்), அருட்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதிவதனாவின் (லண்டன்) அன்பு மாமனாரும், சுப்பிரமணியம் (கனடா), சண்முகரத்தினம் (கனடா), கனகரத்தினம் (முத்தையன் கட்டு), இராமச்சந்திரன் (கனடா), திருநாவுக்கரசு (கனடா), வள்ளியம்மை (கனடா), நாகம்மா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.07.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அச்சுவேலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி தெற்கில் உள்ள முழக்கன் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (B)

தகவல்:
வெ.செல்வரத்தினம் (மனைவி)

## திருமதி கார்த்திகேசு சின்னையா இராசம்மா

வேலணை மேற்கு, தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் 40/5, வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கா.சின்னையா இராசம்மா நேற்று (06.07.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு சின்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசர் - அன்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசர் - பார்வதிப்பிள்ளையின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் (ஆசிரியர்), சிவபாக்கியம், பொன்னுத்துரை, இராசையா, பொன்னம்மா, தங்கம்மா, விசாலாட்சி, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் சிறியதாயாரும், செல்வநாயகம் (சுவிஸ்), சிவசுப்பிரமணியம் (கனடா), சிவஞானசுந்தரம், சிவபாதசுந்தரம் (கனடா), சிவபாக்கியநாதன், சிவகௌரி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து, சுகிர்தவதி (சுவிஸ்), கருணைநாயகி (கனடா), ரட்ணேஸ்வரி, சரோஜாதேவி (கனடா), Dr.சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமியும், திருமகள் (கனடா), ராஜன் (இந்தியா), ரகு (கனடா), சிவயோகநாதன் (லண்டன்), தமிழ்ச்செல்வி (கனடா), சிவகுமரன் (கனடா), பாமினி, சத்தியா (ஜேர்மனி), கார்த்தீபன், சிவதீபன் (கட்டார்), ரமேஷ் (கனடா), அகிலா (கனடா), தாட்சாயினி (கனடா), தயாளினி (கனடா), தயாநிதி (கனடா), அச்சுதன் (முதலாம் வருடம் - முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), அருச்சுனா, நாராயணி (மாணவி - யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2008) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40/5, வைமன் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (A)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
மருமகன் Dr.என்.சிவபாலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வு மாணவன் அந்தப் புலத்தில் அடிப்படை அறிவைப் பெற்றிருப்பது மிகவும் அவசிய தேவை

**கடந்த சில வருடாங்களுக்குள் உயர் பட்டப்பின்படிப்பு என்பது தமிழ் மாணவர் மத்தியில் குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்களிடையே அபரிமிதமாக வளர்ச்சியடைந் திருப்பதைக் காணமுடிகிறது. இதற்குப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்தவர் களும், பதவியில் இருப்பவர்களும் தொடர்ந்தும் கற்கவேண்டும் என்பதில் காட்டிவரும் அக்கறை ஒரு காரணமாகும். அதை ஊக்கவிக்கும் நோக்கில் யாழ்ப்பல்கலைக்கழக உயர்பட்டப் பீடமும் பல புதிய பாடநெறிகள் பலவற்றை அறிமுகப்படுத்தி வருவதுடன் அசாதாரண சூழ்நிலையிலும் அக்கற்கை நெறிகள் முழுமையாக நடந்தேறி வருவதும் இன்னொரு காரணமாகும்.**

**இருப்பினும் உயர்பட்டப் பின்படிப்பு என்பது வகுப்பறைக் கற்றலோடு மட்டும் முடிவடைவதல்ல. அதற்கப்பால் எமது சமூகத்திற்குப் பயன்தரும் புதிய முடிவுகளையும் கண்டுபிடிப்புக்களையும் முன்வைக்கும் ஆராய்சியோடு சம்பந்தப்பட்டவையாகும். அவற்றைக் கருத்தில் கொண்டு உயர்பட்டப் பின்படிப்பைத் தொடரும் ஆராய்ச்சியாளரின் நன்மை கருதி அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதிபதி கலையரங்கில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த மகாநாட்டு நிறைவின் போது அதன் தலைவரும், உயா பட்டப் பின்படிப்புகளின் பீடாதிபதியுமான பௌதீகவியல் பேராசிரியர் க.கந்தசாமி "ஆய்வும் ஆய்வுக்குரிய பிரச்சினைகளை அடையாளம் காணலும்" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆற்றிய தலைமைப் பேருரையின் சாராம்சம் தமிழில் தரப்படுகிறது.**

## தமிழரின் கல்விப் பாரம்பரியத்தில் ஆய்வும் அதற்குரிய பிரச்சினைகளை அடையாளம் காணலும்

### பாகம் 1

இலங்கைத் தமிழரின், அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழரின் கல்விப் பரப்பிற்கு தொன்மையான, தொடர்ச்சி குன்றாத நீண்ட பாரம்பரிய வரலாறு உண்டு. 19ஆம் நூற்றாண்டிலும், 20 நூற்றாண்டின் தொடக்க காலப் பகுதியிலும் வாழ்ந்த எமது மூத்த கல்வியா ளர்கள் மற்றும் சமயப்பெரியோர்கள் பலர் சைவத் தையும், தமிழையும் இணைத்த நிலையில் எமது கல்விப் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் சென்றாலும் அவற்றோடு பிறமொழிக் கல்வி மரபுகளையும் இணைத்து எமது கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதன் முக்கி யத்துவத்தையும் உணரத் தொடங்கினர்.

கடந்த இரு சகாப்தங்களுக்கு முன்னர் எமது பெற்றோரில் பலர் தமது பிள்ளைகள் கல்விப் பொதுத்தரப் சாதாரண பரீட்சையில் சித்தியெய்தி உயர்தரக் கல்வியைத் தொடர் வதை உயர்ந்த கல்வியின் அடையாளமாகக் கருதினர். பின்னர் அந்நிலையில் இருந்து விடுபட்டு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறு வதையே உயர் கல்வியாகப் பார்த்தனர். தற்போது அந் நிலையிலும் மாற்றமடைந்து உயர்பட்டப் பின்படிப்பைத் தொடர்வதே உயர் கல்வியாகப் பார்க்கின்றனர். மேலும் இன்று அரசாங்க உத் தியோகத்தில் உள்ளவர்கள் பலரும் தமது பதவி உயர்வுகளுக்கு எதாவது ஒரு முதுமாணி பட்டத்தை பெறவேண்டியவர் களாக உள்ளனர். இதன் முக்கியத்தை உயர் கல்விக்குப்பொறுப்பான அமைச்சர் பேராசிரியர் விஷ்வ வர்ணபாலா அண்மைக்காலங்களில் ஆற்றிய உரைகளும் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன. இன்று எமது பல்கலைக்கழக உயர் பட்டப் பின்படிப்பு பீடத்தில் ஏறத்தாழ 500ற்கு மேற்பட்ட மாணவர்கள் முதுமானி (M.A), முதுதத்துவமானி (M.Phil), கலாநிதிப் (Ph.D) பட்டப்படிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களில் பலர் எமது பல் கலைக்கழகத்தில் இருந்து இளமாணிப் பட்டப் பெற்று தற்போது கல்வித்துறையிலும், நிர்வாகத்துறையிலும் உயர் பதவி வகிப்பவர்களாவர். இந்த எண்ணிக்கை, உயர்கல்வியைத் தொடர்வதில் எமது மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள விழிப் புணர்வையும், அவர்கள் தொடர் வதற் கான தேவை உள்ளமையையும், அதில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் அடைந் துள்ள வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுவ தாகப் பெருமைப்பட இடமுண்டு.

ஆயினும் மாண வர்களின் எண்ணிக்கை மட்டும் உயர் கல்வி யின் தரத்தை அடையாளப்படுத்தும் அள வீடாகக் கருதமுடியாது. மாறாக உயர் கல்வியின் நோக்கம், அதன் தரம். என்பன முழுமை பெற்று அது பரந்து பட்ட அளவில் மக்களைச் சென்றடையும் போது தான் அது உயர் கல்வி என்ற அங்கீகாரத்தைப் பெறமுடியும். அதை அடை வதற்கான வழிமுறைகளின் சாராம்சத்தை சுட்டிக் காட்டுவதே எனது நோக்கமாகும்.

**உயர் பட்டப்படிப்பின் கருப் பொருள**

பாடசாலைக் கல்வியும், பல்கலைக்கழகத் தில் மேற்கொள்ளப்படும் இளமாணிப் பட்டக் கல்வியும் வரையறுக்கப்பட்ட பாடநெறிகளை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றில் மாணவனின் தனிப்பட்ட கருத்துக்கள், முடிவு கள், விமர்சனங்கள், விளக்கங்கள் பெரும்பா லும் கற்றுக் கொண்ட பாடநெறிகளை ஒட்டி யதாக இருக்க வேண்டும் என்று எதிர் பாாக் கப்படுகிறது. இவற்றின் ஊடாக அடையப்படும் அறிவுத்தேடல், கல்விப்புலமை, அனுபவம் என்பன உயர் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கு அத்திவாரமாக இருந்தாலும் உயர் பட்டப் படிப்பின் நோக்கமும், எதிர்பார்ப்பும் முற்றிலும் வேறுபட்டதாகும்.

உயர்பட்டப் பின்படிப்பு என்பது அக் கல் வியைத் தொடரும் மாணவர் ஒருவர், தான் தெரிவு செய்து கொண்ட கல்விப்புலத்தில் அது அரசியல், பொருளாதாரம். சமூகம். வஞ்ஞானம் அல்லது தொழில் நுட்பம் சார்ந்த எத்துறையாக இருப்பினும் அத்துறையில் உள்ள பிரச்சினை ஒன்றை அடையாளம் கண்டு அது தோன்றியதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதற்குரிய தீர்வைத் தனது பூரண ஆய்வின் மூலம் முன்மொழி வதை அல்லது பிரச்சினையொன்றுக்கு முன் மொழியப்பட்ட தீர்வொன்றில் குறைகள் இருப்பின் அவற்றை திருத்துவதைக் அல்லது முன்மொழியப்பட்ட தீர்விலும் சிறந்தவோர் தீர்வை முன்மொழி வதைக் கருப்பொருளாகக் கொண்டதாகும்.

ஆகவே பட்டப்பின்படிப்பில் அதில் ஈடுபடும் மாணவரின் ஆய்வே முதன்மைக் கருப்பொரு ளாக இருப்பதால் அந்த ஆய்வில் மாணவரின் முயற்சி, கடின உழைப்பு, ஆய்வுத்தேடல், ஆய்வு தொடர்பான விமர்சனங்கள், விளக் கங்கள், முன்மொழியப்படும், முடிவுகள் என் பன குறிப்பிட்ட ஆய்வின் பெறுபேறாக எதிர் பார்க்கப்படுகிறது. இன்று எமது பல்கலைக் கழகங்களில் மேற்கொள்ளப்படும் பெரும் பாலான ஆய்வுகள் எமது சமூகம் நாளாந் தம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை அடிப்படைக் கருப்பொருளாகக் கொண்டவை யாகும். இப்பிரச்சினைகள் தொடர்பாக இன்று பல்கலைக்கழகத்திற்கு வெளியே அரச திணைக்களங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் பொதுசன அமைப்புக்களாலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றை மேற்கொள்ளும் அதிகாரிகள் பலர் இன்று எமது பீடத்தில் உயர்பட்டப் படிப்பை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பல் கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வு கள் சமகால ஆய்வு நெறிமுறைகளை பின் பற்றி பூரணமாகச் செய்யப்படும் போதுதான் அவற்றின் ஊடாக முன்வைக்கப்படும் முடிவு கள் இச்சமூகத்திற்குப் பயன் அளிப்பதாக இருக்கும்.

**ஆய்வுக்குரிய தகுதி**

ஆராய்ச்சி அல்லது ஆய்வு என்பது ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக உண்மைகளை தேடித் துருவி ஆராயும் ஒரு கவன மிக்க திறனாய்வு அல்லது தேர்வு என அறிஞர் கூறுவர். ஹக்ஸ்லே என்ற அறிஞர் "ஓர் அறிவியல் அறிஞருக்கு அறிவே உயர்ந்தது: உண் மையே யாவற்றிலும் மேலானது: ஏனைய எல்லாம் இவற்றிற்குப் பின்னால் கொள் ளத் தக்கவையே" எனக் கூறுகிறார். இக்கூற்று ஆய்வாளர் ஒருவர் தனது ஆய்வில் அறிவு, உண்மை இரண்டையையுமே தமது பண்பு களாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

இதனால் எந்த ஒரு ஆய் வாளனுக்கும் தான் ஆய்வு செய்யும் ஆய்வுப் பொருள் பற்றி தெளிவான அறிவு வேண்டும். சமூக மொன்றுடன் இணைந்திராத, அச் சமூகத் தைப்பற்றி கேட்டுப், படித்து அறிந்திராத ஒரு வர் அச்சமூகம் பற்றி ஆய்வைச் செய்ய இய லாது. பௌதீகவியல் பற்றி எதுவுமே தெரியாத ஒருவர் பௌதீகவியல் பிரச்சினையொன்றைத தீர்ப்பது அல்லது பௌதீகவியலில் புதிதாக ஒன்றைக் கண்டுபிடிப்பது இயலாத தொன்று. மேலும் முயற்சிப்பதும் ஆரோக்கியமான ஆய் வாக அமையாது. இதனால்தான் பல்கலைக் கழகங்களில் ஆய்வு மாணவனொ ருவன் அவனது ஆய்வுப் புலத்தில் அடிப்படை அறிவைப் பெற்ற பின்னரே ஆய்வில் ஈடுபடு வதற்கு அனுமதிக்கப்படுகிறன் என்பதை முத லில் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

அதாவது பல்கலைக்கழகங்களில் மாணவ னொரு வன் நான்கு அல்லது ஐந்து வருட அடிப்படைக் கல்வியைப் பெற்றதன் பின்னரே அவனது கற்கைநெறிக்குத் தொடர்புடைய துறையொன்றில் ஆய்வில் ஈடுபட அனுமதிப் பது வழமையாகும். மேலும் ஆய்வாளனொரு வன், ஓர் ஆராய்ச்சியாளன் பின்பற்ற வேண் டிய நீதி நெறிகள நன்கு தெரிந்தவனாகவும் அவற்றைக் நேர்மையுடன் கடைப்பிடிப்பவனா கவும் இருப்பது மிகவும் அவசியம். ஒருவன் தான் ஆய்வுசெய்ய விழையும் கல்விப் புலத்தில் அடிப்படைஅறிவை உடையவனாக இருப்பினும் தனது ஆய்வுக்கான கருவை இனம் காண்பதென்பது இலகுவான விடய மொன்றல்ல. ஆராய்ச்சி உலகிற்குள் கால் அடி பதிக்க முயலும எல்லோருக்கும் ஆய்வு செய்யக்கூடிய கரு வொன்றை இனம் காண் பதென்பது சவாலுக் குரிய முயற்சியே. இக் கட்டுரையின் நோக்கம் ஆய்வொன்றைத் தொடங்கவுள்ள இளம் பட்ட தாரிகளுக்கு வழி காட்டுதலேயாகும்.

**ஆய்வு என்றால் என்ன?**

ஆய்வு என்பது குறிப்பிட்ட ஒரு துறையில் புதியவற்றை கண்டுபிடிப்பதை, அத்துறை யுடன் சார்ந்த விடயமொன்றில் விடையளிக் கப்படாத கேள்வி ஒன்றுக்கு விடையளிப்பதை, பிரச்சி னையொன்றுக்குத் தீர்வுகாண்பதை அல்லது இன்னோர் முன்னேற்றகரமான தீர வொன்றை முன்மொழிவதைக் குறிப்பதாகும். இச்செயற் பாட்டுக்குத் தெளிவான நோக்கு, சரியான எடு கோள், பன்முகப்பட்ட அணுகுமுறைகள் இருத்தல் அவசியம். இந்நோக்கில் குறிப்பிட்ட ஒரு தலைப்பின் கீழ் ஆய்வை மேற்கொள்ளும் ஒரு ஆய்வாளர் அதற்கு வேண்டிய தரவுகள், தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றை நூல் கள், கட்டுரைகள், வினா நிரல், நேர்காணல், வானொலி, தொலைக்காட்சி, இணைய தளம் எனப் பலதரப்பட்ட வழிமுறைகள் ஊடாகப் பெற முடியும் இதன் ஊடாகப் பல புதிய தகவல்களை முன்வைக்க முடியும். அல்லது அறிக்கை சமர்ப் பிக்க முடியும். இது தரவுகளைச் திரட்டவும், ஒருங்கு சேர்ப்பதற்கும், குறிப்பிட்ட ஒரு தக வல் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத் திற்கு அதே மொழியில் அல்லது மொழிமாற் றத்தோடு இடம்மாறுவதற்கும் வழிவகுக்கலாம். மேலும் இதன் மூலம் ஆய் வாளனொருவன் ஆய்வு விடயத்துடன் தொடர்பாக விவரங் களை அல்லது ஆய்வோடு ஒட்டிய அனுபவ அறிவைப் பெறலாம். ஆனால் இவற்றை யெல் லாம் பூரணமான ஆய்வாகக் கொள்ளமுடியாது.

ஆய்வு என்பது அனுப வத்தில் இருந்தும் வேறுபட்டது. ஏனெனில் அனுபவம் வரையறைக்கு உட்பட்டுப் பெறப்படுவதில்லை. மேலும் ஒழுங்கமைக்கப்படாத செயற்பாடும் ஆகும் ஆய்வு வரையறைக்கு உட்பட்ட, ஒழுங் கமைக்கப்பட்ட செயற்பாடாகும். ஆனால் அனுபவத்தில் இருந்து பெற்றுக்கொள்ளும் அறிவு. விடை காணவேண் டிய பல வினாக்களையும் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகளையும் இனங் காண உதவி யாக இருக்கும் அதாவது அனுபவரீதியான அறி வில் இருந்து முழுமையான தீர்வுக்கு வர முடியாவிட்டாலும் திட்டவட்டமான முறையில் ஆய்வைத் தொடங்குவதற்குரிய பலதரவுகளை யும், வழிமுறைகளையும் அவை காட்டலாம்.

உதாரணமாக தென்னை மரமொன்றில் இருந்து தேங்காய் விழுவது இயற்கையான செயல் அதாவது இதுவோர் அனுபவம். பூமிக்கு ஓர் ஈர்ப்பு விசை இருக்கக் கூடுமோ என்பது அறிஞர் மனதில் தற்செயலாக விளைந்தவோர் கருது கோள். இவ்வனுபவம் பின்னர் பூமியின் ஈர்ப்பு விசை பற்றியும் அதன் இயல்புகள் பற்றிய பரி சோதனை முறை ஆய்வுக்கு விஞ் ஞானிகளை வழிப்படுத்தியமை நாம் அறிந்த வரலாறு.




ஆய்வு அணுகுமுறையில் தர்க்கரீதியான கேள்விகள், விவாதங்களை, விமர்சனங்கள், விளக்கங்கள் முக்கிய அம்சமாகப் பார்க்க வேண்டியுள்ளது. இது குறிப்பிட்ட ஒரு பிரச் சினை தோன்றுவதற்குப் பின்னணியாக இருந்த சூழ்நிலைகளையும், அதற்குரிய உண் மைக் காரணங்களையும் கண்டறிந்து அவற றைத் தீர்ப்பதற்கு பொருத்தமான அணுகு முறைகளைப் பரிசோதனை அடிப்படையில் ஒப்பீடு செய்து சரியான முடிவுக்கு வருவதற்கு உதவலாம். ஆயினும் இவற்றின் ஊடாக பிரச்சினைக்குரிய தீர்வை முழுமையாக முன் வைக்க முடியும் என்றோ அல்லது முறையான ஆய்வாக அது அமையுமென்றோ கூறமுடி யாது. அதாவது கேள்விகளுக்கு அல்லது அவதானிப்புக்களுக்குத் தர்க்கரீதியாக விளக் கம் கூறலை ஆய்வு என்று கூறமுடியாது. விளக் கம் கூறல் என்பது கருத்துநிலையில் செயற்படலாம் சிலவிடங்களில் உண்மை நிலையில் இருந்து வேறுபடுவதாகவும் அமை யலாம் ஆனால் ஆய்வு அவதானிக்கக் கூடி யது அனு பவத்துக்கு உள்படுத்தக் கூடியது மேலும் எம்சூழலால் நியப்படுத்தக்கூடியது. அனுபவம், விளக்கம் கூறல் போன்ற செயற் பாடுகள் போல இல்லாது ஆய்வுக் கருத்துக் கள் சுயமாக திருத்தப் படக்கூடியன ஆய்வில் பெறப் படும் பேறுகள் கடுமையாகச் சோதனை களுக்கு உள்படுத்தப்படுவன. ஆய்வு முறை களும் பெறுபேறுகளும் ஏனைய ஆய்வா ளர்க ளின் நுண்ஆய்வுக்கும் விமர்சனத்துக்கும் விடு படப்படுபவை. அதாவது ஆய்வு முடிவுகள் அனுபவம் மூலமான முடிவுகளில் இருந் தும் விளக்கம் கூறல் மூலம் பெறப் படும் முடிவுகளில் இருந்தும் வேறுபட் டவை. அப்படியா னால் ஒரு ஆய்வு என் றால் என்ன என்ற கேள் விக்குவிடை காண வேண்டியுள்ளது.

(வளரும்..)



பேராசிரியர் க. கந்தசாமி
பேராசிரியர் பௌதீகத் துறை மற்றும்
பீடாதிபதி உயர் பட்டப் பின்படிப்பு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்





வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் இடம்பெற்ற புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட மதிப்பீட்டு உதவி ஆணையாளர் பா.பாலேந்திரா.உரையாற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம். மாணவி ஒருவருக்கு பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வங்கி [illegible] புத்தகத்தை பிரதம விருந்தினர் கையளிப்பதை இரண்டாவது படத்தில் காணலாம். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரும்பிராய் வடக்கு சரஸ்வதி கிராமத்தை இலங்கை வங்கி கிராமமாகத் தெரிவு செய்து அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் ரி.புவனேந்திரன், உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம், செயற்பாட்டு முகாமையாளர் என். சிவரட்ணம், சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் ஆகியோர் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் உரையாற்றுவதையும் ஏனைய விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் இரண்டாவது படம் காட்டுகிறது. (203)

# வங்கியில் வாடிக்கையாளர் சேமிப்பில் இடும் பணம் குறைந்த வட்டியில் கடனாக வழங்கப்படுகிறது

## இது பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுகிறது எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை7

இலங்கை வங்கியில் யாழ்.மாவட்ட மக்கள் சேமிப்பில் வைப்பிலிடும் பணம் தென்பகுதி அபிவிருத்திக்காகச் சென்று விடுவதாக பலர் குறை கூறுவதுண்டு. இது தவறானதாகும்.

மக்களால் சேமிப்பில் வைப்பிலிடும் பணம் எமது மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்குக் கடனாக குறைந்த வட்டியில் வழங்கப்பட்டு வருகின்றது.

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி கிராமம் இலங்கை வங்கிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. வங்கியின் சுன்னாகம் மேற்தரக்கிளை இக்கிராமத்தை பொருளாதார சுபீட்சமுள்ள கிராமமாக மாற்றுவதற்குத் தெரிவு செய்துள்ளது.

இக்கிராமத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு கடந்த மாதம் உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத் திறந்தவெளி அரங்கில் நிலையத்தின் போசகர் பொ. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியாவது:

குறிப்பாக சுன்னாகம் மேல்தரக்கிளை உங்களுக்கு குறைந்த ஆண்டில் விவசாயக் கடனாக வழங்கப்பட்டுள்ள தொகை இரண்டு கோடியாக உள்ளது.

வங்கிகளுக்கு ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு கிடையாது. வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் வங்கியின் நன்மதிப்பைப் பெற்ற நாணயஸ்தராக இருந்தால் வாழ்நாள் பூராகவும் வங்கியின் நன்மைகளைப் பெற முடியும்.

இலங்கை வங்கி நிதி வர்த்தகத்தை மட்டும் இன்று செய்யவில்லை உங்கள் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்கு பல வழிகளிலும் புலமைப்பரிசில்களை வழங்கி வருவதுடன், சிறந்த மாணவர்களைக் கௌரவித்து பரிசில்களையும் வழங்கி வருகின்றது.

குறிப்பாக உயர்கல்விக்காக கடன்களை வழங்கி தொழில் கிடைத்ததும் கடனைச் செலுத்த வசதிகளைச் செய்து கொடுக்கின்றது. வீடு கட்ட, காணிகளை வாங்க கடன் வசதி வழங்குவதுடன் அழகிய பூந்தோட்டத்தை உருவாக்கவும் வசதிகளை வழங்கி வருகின்றது.

மக்களுக்காகவே வங்கிகள் செயல்படுகின்றன. நாங்கள் ஏழைகள், வங்கிகள் எமக்கு உதவுமா என நினைக்காதீர்கள். வங்கிகளால் வழங்கப்படும் கடன்களை நாணயமாக செலுத்துங்கள். வங்கியில் பெறும் கடன்களை உங்கள் வாழ்வாதாரங்களைப் பெருக்க முதலீடாக வைத்து வாழ்வில் உயருங்கள். வாழ்வில் உயரும் போது சேமிப்பு பழக்கம் சொல்லாமலே வரும். அப்போதுவங்கியும் பெருமைப்படும்-என்றார்.

நிகழ்வில் பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம் கருத்துரையாற்றுகையில்:-

இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்தரக்கிளை உங்கள் கிராமத்தை சுபிட்சம் மிக்க பொருளாதார கிராமமாக மாற்றுவதற்கு தெரிவு செய்திருப்பது மிகப் பொருத்தமானதாகவுள்ளது.

இக்கிராம மக்கள் தமிழர்களின் பண் பாட்டு கோலங்களை கைக்கொண்டு இவ் விழாவை நடாத்தியமை இன்றைய விழாவில் காணக் கிடைத்தது.

நமது பிரதேசத்தில் தமிழ் மக்களின் வீரத்தின் அறிகுறியாக நடைபெற்று வந்த முட்டி உடைத்தல், கிறிஸ் கம்பம்ஏறுதல், தலையணைச் சண்டை, யானைக்கு கண் வைத்தல் போன்ற விளையாட்டுக்கள் இங்கு நடைபெற்றுள்ளன.

இந்த விளையாட்டுக்கள் மனதிற்கு அமைதியையும்,மகிழ்ச்சியையும் கொடுக்கக் கூடியது. பலம் பார்த்தல் போட்டியில் வங்கிப் பணியாளர்கள் வாஞ்சையுடன் கலந்து கொண்டு இம்மக்களுடன் உறவை வளர்த்துள்ளார்கள்.

இலங்கை வங்கி இன்றைக்கு நாடு பூராவும் பொருளாதார சுபீட்சமிக்க கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இத்திட்டம் யாழ். மாவட்டத்தில் முழுமூச்சாக நடைமுறைப் படுத்தப் பட்டுவருகின்றது-என்றார். (ப-203)

## தீவக மக்களின் நலனுக்காக நடமாடும் ஆய்வுகூடச் சேவை

நல்லூர், ஜூலை 7

தீவக மக்களின் நலன்கருதி மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது புதன்கிழமைகளில் நடமாடும் ஆய்வுகூட சேவைகள் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் வசதியை முன்னிட்டு ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை, வேலணை பிரதேச வைத்தியசாலைகளில் இந்த நடமாடும் ஆய்வுகூட சேவை இடம் பெறவுள்ளது.

தீவக மக்கள் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களுக்கான பரிசோதனைகளைச் செய்வதற்கென யர்ழ் நகர் செல்ல வேண்டிய அவசியம் இனிமேல் இல்லை எனக் கூறப்படுகிறது. (203-111)

## மாதாந்த உதவிப்பணம் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

வலி.தென்மேற்கு, ஜூலை 7

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வழங்குவதற்காக வடக்கு மாகாண சமூக சேவை திணைக்களம் 10 ஆயிரம் ரூபா நிதியினை வழங்கியுள்ளது.

ஏற்கனவே இப் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப் பொதுக் கொடுப்பனவு கோரி விண்ணப்பித்து காத்திருப்பவர்களுக்கு இந் நிதியை கொண்டு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் தெரிவித்தார். (203-135)

## மாடுகளைத் திருடி வந்த சந்தேகநபர் சுன்னாகம் பொலிசாரால் கைது

வலி வடக்கு ஜூலை 7

இரவு நேரங்களில் மாடுகளைத் திருடி வந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற குழுவினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் மட்டும் துர்க்காபுரம், அம்பனை ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் இரண்டுலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய 5 மாடுகள் களவாடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கடந்த வியாழக் கிழமை இரவு அவசர அவசரமாக மாட்டைக் கொண்டு சென்ற இருவரை சுன்னாகம் பொலிசார் மறித்துள்ளர்கள்.

அதில் ஒருவர் மாட்டை கைவிட்டு விட்டு குறிப்பிட்ட இடத்தில் இருந்து தப்பி ஓடிவிட மற்றவரை சுன்னாகம் பொலிசார் விசாரணை செய்தனர். இதனையடுத்து அது திருட்டு மாடு என்பது தெரியவந்தது. சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர் மல்லாகம் நிதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிவிசாரணைகளை மேற்கொண்ட விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் மற்றோரு சந்தேக நபரையும் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (203-86)

## இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள்

வலி.தென்மேற்கு, ஜூலை 7

வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலிருந்து 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்து வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினால் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நுளம்புவலை, பாய், படுக்கைவிரிப்பு, சவர்க்காரம் அடங்கிய பொதிகளே வழங்கப்பட்டன. (202-135)

## வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைக்கு இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய பாடங்களில் வெட்டுப் புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் இடம்பெறவுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுள்ளனர். (203)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் கணனிப் பயிற்சி பெறவுள்ளோரை சமூகமளிக்குமாறு கோரிக்கை

வலி.வடக்கு, ஜூலை 7

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் நடத்தப்படும் கணனிப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்களை நாளை செவ்வாய்க்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கணனி பயிற்சி நிலையத்திற்கு சமூகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டவர்களாக இருப்பதுடன் தமது கல்வித் தகமைகளை நிருபிக்கக் கூடிய ஆவணங்களுடன் சமூகம் தரும்படியும் திட்ட உதவியாளரும் மாவட்ட இணைப்பாளருமான ஆர். கிருஷ்ணதாஸ் அறிவித்துள்ளார். (203-86)

## அடிப்படை ஆங்கிலப் பயிற்சி விரைவில் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

தென்மராட்சி பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியினைப் பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகளுக்கான அடிப்படை ஆங்கிலப் பயிற்சி நெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்கு நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பதிவுகள் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அக் கடிதத்தினையும் பதிவின்போது கொண்டு வருமாறு அறிவித்துள்ளார்.

பயிற்சி நெறிக்கு 130 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (203-207)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஏமது பாடசாலையின் உப அதிபர்
திரு. சபாபதிப்பிள்ளை நரேந்திரன்
அவர்கள் 2007 ஆம் ஆண்டு
யாழ்.பல்கலைக்கழகத்தினால்
நடத்தப்பட்ட கல்வி முதுமாணிக்கான
தேர்வில் சித்தியடைந்ததையிட்டு
நாம் பெருமைப்படுவதுடன் அவர்
பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை குடத்தனை.

(ச/553624)

### விற்பனைக்கு

ஓடுகள், பனைமரங்கள், வளைகள் என்பன விற்பனைக்குண்டு

158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(கைலாச பிள்ளையார் கோயிலுக்கும் I.C.R.C சந்திக்கும் இடையில்)

(ச/553625)

### பணி ஆள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தொலைத்தொடர்பு நிலையத்துக்குப் பெண் பணியாளர்கள் தேவை. நகரினை அண்டிய பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. 07.07.2008-11.07.2008 திகதிகளில் மாலை 4.00

E.City

தொ.பே:- 0212226113

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
மோசேஸ் எட்வேட் J.P
(முன்னாள் மாநகரசபை உறுப்பினர், ஓய்வுபெற்ற இறப்பர் தோட்ட அதிகாரி)

மலர்வு 10.02.1930
உதிர்வு 06.06.2008

நல்லதோர் குடும்பத்தலைவனாய்
நானிலத்தோர் போற்ற வாழ்ந்த உத்தமரே
எந்நாளும் எவருக்கும் சலிக்காது உதவுபவரே
இனிய வார்த்தை பேசி இன்புற்று வாழ்ந்தவரே
எல்லோரும் உம் புகழ் பேசி நிற்க
நாம் ஏங்குகிறோம் உங்கள் இனிய முகம் காண்பதற்கே
அப்பா! எங்கள் இதயம் ஏங்கிக் கனக்க
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல.30, சென்பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(ச/553629)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மானிப்பாய் இந்துக் கல்லூரியும் தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதும் காட்சிகளை யும், சம்பியனான மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கான சான்றிதழை பிரதம விருந்தினர் ஈ.எஸ். பேரம்பலம் வழங் குவதையும் படங்களில் காணலாம்.(போட்டி குறித்த விவரணம் இப்பக்கத்தின் தலைப்புச் செய்தியாகப் பிரசுரமாகிறது)
(படங்கள்-நேசன்)

# அதிரடியாக ஆடி அசத்தியது மானிப்பாய் இந்து; தேசிய மட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது!

வெற்றிக்கு காரண கர்த்தாக்கள்




யாழ்ப்பாணம், ஜூலை7

இலங்கை பாடசாலைகள் உதைபந் தாட்டச் சம்மேளனத்தினால் மாவட்டங்கள் தோறும் நடத்தப்பட்டுவரும் சுற்றுப்போட் டித் தொடரில் -

யாழ். மாவட்டத்துக்கான ஆட்டத்தில் சம்பியனாகி தேசிய மட்டப்போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பை மானிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் சங்கத் தின் ஏற்பாட்டில் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத் தின் அனுசரணையுடன் வலய ரீதியாக ஆட்டங்கள் நடத்தப்பட்டுவந்தன.

வலயங்களில் வெற்றிபெற்ற அணிகள் மாவட்ட மட்டத்தில் ஆடின.

இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத் தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடி யதுடன் இரு அணிகளும் மாறிமாறி கோல் கள் பெறும் எத்தனத்திலும் ஈடுபட்டன.

ஆட்டம் ஆரம்பமாகிய 15 ஆவது நிமி டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் னணி வீரன் நிரோஜன் தனக்கு கிடைத்த பந்தை நேரடியாக கோல் கம்பத்தை நோக்கி உதைத்த போது பந்து இவரின் அணியைச் சேர்ந்த அஜித்தன் காலில் பட்டு முதலா வது கோல் பெறப்பட்டது.

தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல் லூரி புதிய உத்வேகத்துடன் விளையாடி அடுத்த 22 ஆவது நிமிடத்தில் முன்னணி வீரன் அஜித் தனக்கு கிடைத்த பந்தை மிக வும் லாபகமாக எதிரணியை நோக்கி அடித்து மீண்டும் ஒரு கோலை பெற்றுக் கொண்டனர்.

முதல் பாதி ஆட்டம் நிறைவு பெறும் வேளையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 2 : 0 என்ற கோல் கணக்கில் முன்னணி யில் நின்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்ப மாகியதும் தேவரையாளி இந்துக் கல்லூரி வீரர்கள் எதிரணியினரின் கோல் கம்பத்தை ஆக்கிரமித்து பந்தை கொண்டு சென்று வெளியால் அடித்து பல தடவைகள் திருப் பினார்கள்.

இந் நிலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னணி வீரன் கனிஸ்ரன் மீண் டும் ஒரு பந்தைக் கொண்டுவந்து அடித்து கோலை பெற்றுக்கொண்டார்.

மூன்று கோல்கள் அடிக்கப்பட்ட நிலை யிலும் தேவரையாளி இந்துக் கல்லூரி வீரர் கள் சளைக்காது இறுதிவரை விளையாடினர்.

போட்டி நிறைவு பெற்ற போது மானிப் பாய் இந்துக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வென்று வெற்றியைப் பதிவு செய்து தேசிய மட்டப் போட்டிக்கு தெரி வானது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் மகாவித்தி யாலயமும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் பெறாது ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சமநிலை தவிர்ப்பு உதைகளை சரியாகப் பயன் படுத்தி 3: 2 என்ற கோல் கணக்கில் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தை வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.
(1-86)

## பாடசாலைகளின் கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி யில் யாழ்.பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத் தால் நடத்தப்பட்டு வரும் 15 வயதுப் பிரி வுக்கான கிரிக்கெட் ஆட்டங்களில் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட் டங்களில் பங்குபற்றம் அணிகள் வரு மாறு:

பிரிவு-'ஏ'

* யாழ்.இந்துக் கல்லூரி மைதானம்- யாழ்.இந்து எதிர் யாழ். சென்.பற்றிக்ஸ்.
* கொக்குவில் இந்து மைதானம்- கொக்குவில் இந்து எதிர் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் 'ஏ' அணி.

பிரிவு-'பி'

* பருத்தித்துறை ஹாட்லி மைதானம்- கரவெட்டி விக்கினேஸ்வரா எதிர் பருத்தித் துறை ஹாட்லி.
* தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானம்- மகாஜனா எதிர் மானிப்பாய் இந்து.

பிரிவு- 'சி'

* சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானம்- ஸ்கந்தவரோதயா எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.
* யாழ்.சென்றல் மைதானம்- தெல் லிப்பழை யூனியன் எதிர் யாழ்.சென்றல்.

(1-86)

## காவலூர் பெரு விளையாட்டு போட்டிகளின் முடிவுகள்

கரம்பன், ஜூலை7

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதி பர் பணிமனையின் வருடாந்த விளையாட் டுப் போட்டிகள் யா/புனித அந்தோனியார் கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

பெருவிளையாடுப் போட்டி முடி வுகள் வருமாறு:-

* **வலைப்பந்து**-*பெண்கள்*- கரம் பொன் விளையாட்டுக்கழகம், ஊர்காவற் றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம்.
* **கரபந்தாட்டம்**-*ஆண்கள்*- ஊர் காவற்றுறை சென். ஜேம்ஸ் வி.கழகம், அனலைதீவு அருணோதயா விளையாட் டுக் கழகம்.
* **உதைபந்தாட்டம்**-*ஆண்கள்*- தம் பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம், மெலிஞ்சிமுனை இருதயராசா விளை யாட்டுக்கழகம்.
* **துடுப்பாட்டம்**-*ஆண்கள்*- அனலை தீவு லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகம், தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம்.

(1-325)

## சென்.ஜோன்ஸை வென்றது சென்.பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை7

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடத்த சிநேகபூர்வமான 15வயது பிரி வினருக்குக்கான ஆட்டம் ஒன்றியல் சென். பற்றிக்ஸ்வெற்றி பெற்றது.

சென். பற்றிக்ஸ்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் யாழ்ப் பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடியசென்.பற் றிக்ஸ் கல்லூரி 33.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட் டங்களை பெற்றுக் கொண்டது.

அஜித் ஆட்டமிழக்காது 15,சுகிர்தன் 18, குகபாலா 13, நிலக்சன் 12 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

சபேசன் 16 ஓட்டங்களை கொடுத்து 03 விக்கெடடையும் கௌசிகன் 20 ஓட்டங் களுக்கு 03 விக்கெட்டையும் கைப்பற்றி னார்கள்.

142 ஓட்டங்களை வெற்றி இல்காக கொண்டு பதிலக்கு துடுப்பெடுத்தாட கள மிறங்கிய சென்ஜோன்ஸ் கல்லூரி 36.3 ஓவர்களில் அனைத்து விக்கெடடுக்க ளையும் இழந்து 126 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

ஜோஜிதன் 49, பானுப்பிரியன் 17, ஸ்ரீபன் ஆட்டமிழக்காது 11, கஜானன் 10 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

கவாஸ்கர் 14 ஓட்டங்களுக்கு 02 விக் கெட்டையும், கிளிங்ரன் 15 ஓட்டங் களுக்கு 02 விக்கெட்டையும், நோபேட் 24 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.
(1-86)




## விறுவிறுப்பாக ஆடிய பெண்கள் அணிகள்; ஒரு கோல் போட்டு சம்பியனானது கரவெட்டி

வலி.வடக்கு, ஜூலை7

யாழ்.மாவட்ட பிரதேசசெயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான உதைபந் தாட்டச் சுற்றுப்போட்டியில் கரவெட்டி பிர தேச செயலக அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். பிர தேச செயலக அணியும் கரவெட்டிப் பிர தேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

முதல் தடவையாக இந்தாண்டே அதிக எண்ணிக்கையான பெண்கள் அணி மாவட்ட மட்டத்தில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்துகொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் முடிவடையும் வரை இரு அணிகளுமே விறு விறுப்பாக விளையாடின. கோல்கள் பெறு வதில் பெரும் முயற்சி எடுத்தபோதிலும் அது இரு அணிகளுக்கும் முதல் பாதி ஆட்டத்தில் சாத்தியமாகாத நிலையே காணப்பட்டது.

முதல்பாதி கோல்கள் எதனையும் இரு அணிகளும் பெறாத நிலையில் நிறைவு பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் எப்படி யும் கோல்கள் பெற்றே தீருவது என்ற திட சங்கற்பத்ததுடன் இரு அணிகளும் களமிறங்கி விளையாடத்தொடங்கின.

போட்டி வழமைபோன்று சூடுபிடித்து விளையாடப்பட்டது. இரு அணிகளின் ஆதரவாளர்களும் கூட விளையாடுபவர்க ளாக மாறிவிட்டார்கள் என்று கூறும் அள வுக்கு இரு அணிகளுமே தம்மாலான ஆதர வையும் உற்சாகத்தையும் வழங்கினார்கள்.

போட்டி சூடுபிடித்த நிலையில் யாழ். பிரதேச செயலக கோல்காப்பாளரின் எல் லைக்குள் கரவெட்டி பிரதேச செயலக அணி அடித்த பந்து ஒன்று யாழ்.பிரதேச செயலக அணி வீராங்கனையால் கையால் தடுக்கப்பட்டதாக கூறிதண்டனை உதை யொன்று வழங்கப்பட்டது.

தண்டனை உதையாக வழங்கப்பட்ட உதையை நேரத்தையும், தேவையையும் கருத்தில் கொண்டு கரவெட்டி பிரதேச அணி வீராங்கனை உரியமுறையில் உதைத்து முதலாவது கோலை பெற்றுக் கொண்டார்.

குறிப்பிட்டகோலைத் தொடர்ந்து கர வெட்டி பிரதேச செயலக அணி உற்சாகம் பெற்று வேகமாக விளையாடிய போதிலும் அதற்கு ஈடுகொடுத்த யாழ்.பிரதேசசெயலக அணியும் விளையாடியது. ஆட்டம் நிறைவு பெறும் வரை இரு அணிகளும் கோல்கள் பெறும் வாய்ப்புகள் கிடைத்த போதிலும் கோல்கள் எதனையும் பெறவில்லை.

ஆட்ட நிறைவில் கரவெட்டி பிரதேச செய லக அணி 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்.பிரேதச செயல அணியை வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
(1-86)

## தாச்சிச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை7

கோண்டாவில் மறுமலர்ச்சி விளை யாட்டுக்கழகம் யாழ். மாவட்ட தாச்சி விளை யாட்டுச் சங்க அனுசரணையுடன் யூனியன் அசூரன்ஸ் நிறுவன ஆதரவுடன் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் மயிலிட்டி ஒற்றுமை வி.கவும் சுன்னா கம் காந்தரூபன் வி.கவும் மோதுகின்றன.
(1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புங்குடுதீவு மத்தி புனித சவேரியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது.

கட்டடத்தை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் உரையாற்றுவதையும் புங்குடுதீவு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் வெ.செபமாலை, நீரியல்வளத்துறை உதவிப்பணிப்பாளர் க.தர்மலிங்கம், வேலணைப் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தி. மீரா ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன்)

## வடமத்திய மாகாணத்தில் மங்களம் மாஸ்ரர் போட்டி

மட்டக்களப்பு, ஜூலை 7

வடமத்திய மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர்களில் ஒருவரான மங்களம் மாஸ்ரர் என அழைக்கப்படும் ஜயாத்துரை கதிர்காமத்தம்பியும் போட்டியிடுகிறார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பட்டியலில் இவர் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண சபைக்கு உட் பட்ட பகுதியில் வாழும் தமிழ் மக்களின் வாக்குகளை பெறும் நோக்கில் இவர் களம் இறக்கப் பட்டுள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டது.

(அ-1)


### தவறிவிட்டது

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் கடமையாற்றும் M. சிறீஸ்கந்தராசா ஆகிய எனது வங்கி அடையாள அட்டை 28.06.2008 சனிக்கிழமை தவறிவிட்டது. (NIC NO-5929 30975V) கண்டெடுத்தவர்கள் அண்மையிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியில் ஒப்படைக்கவும்.

(76081) சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.



### யா/இணுவில் மத்திய கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்- 2008

காலம்: 09.07.2008 புதன்கிழமை மு.ப.9.00 மணி
இடம்: கல்லூரி சரஸ்வதி கலையரங்கம்
தலைவர்: திரு.அ.சதானந்தன் (அதிபர்)
பிரதமவிருந்தினர்: மதிப்பார்ந்த ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கல்விசார் நூலகர்)
சிறப்பு விருந்தினர்: செல்வி வீ.கந்தையா
(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
கௌரவ விருந்தினர்: திரு. என்.எஸ்.ஆர்.சிவரூபன்
(பிரதித்திட்டமிடற் பணிப்பாளர், நிகொட் நிறுவனம், யாழ். செயலகம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி.
(76059)


## ஏறாவூரில் இருவர் சூட்டுக்குக் காயம்

மட்டக்களப்பு, ஜூலை 7

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூரில் இருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. ஏறாவூரில் நேற்று முன்தினம் இனம் தெரியாத ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் ஏறாவூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் காவல்துறையினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## தென்மராட்சி வலயமட்ட ஆக்கத்திறன் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட சமூக விஞ்ஞான ஆக்கத்திறன் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)


### நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்
### கைதடி அருள்மிகு ஒக்கலை விநாயகர் ஆலயம்



எமது ஆலய நிர்மாண வேலைகளுக்கு நிதியுதவி வழங்கிய வடமாகாண விசேட செயலணித் தலைவரும், சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும் ஈ.பி.டி.பி.கட்சியின் செயலாளருமான கௌரவ திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, அவரது சேவைகள் மேலும் தொடர எல்லாம் வல்ல ஒக்கலை விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

கைதடி அருள்மிகு ஒக்கலை விநாயகர் ஆலயம், கைதடி.
ஆலய பரிபாலன சபை.
(76041)



### ஆத்மசாந்திப் பிரார்த்தனை



எமது சக ஆசிரியை
திருமதி கலைச்செல்வி விக்னேஸ்வரன்
அவர்களது சகோதரன்
க.இலங்கைநேசன் அவர்கள்
07.06.2008 அன்று கனடாவில்
காலமானதையிட்டு அவரது
ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
(76036)



### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 03 . 1927
மறைவு 19 . 06 . 2007



அமரர் மருதர் கணேசு
(ஓய்வுபெற்ற நில அளவை உத்தியோகத்தர்-கங்காணி)
திதி: 07.07.2008
தினந்தோறும் ஆலயம் சென்று ஆண்டவனை வழிபட்டு வந்தீரையா!
உங்கள் ஆத்மா சாந்திபெற காளி அம்மனை வேண்டுகின்றோம்.

காளி கோயிலடி,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
(76047)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



### விற்பனைக்கு

80 அடி சொக்கட்டான் பந்தல், மணவறை விற்பனைக்குண்டு.
தொடர்பு: சுபமங்களா
மல்லாகம் சந்தி.
0776075286, 0776309939
(76030)



### மணப்பெண் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு, ரேவதி அல்லது [illegible] நட்சத்திரத்தில் பிறந்த, 30-35 வயதிற்கிடையில் மணப்பெண் வேண்டப்படுகிறார். பிறந்த திகதி, நட்சத்திரப் பாதம், குறிப்பு என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும். மேலே உள்ள நட்சத்திரங்களில் பிறந்த இளம் விதவைகளும் தொடர்பு கொள்ளலாம்.
இ. ஜெயராஜசிங்கம்
காளியவத்தை ஒழுங்கை, உடுவில் மேற்கு, சுன்னாகம்.



### அறிவித்தல்

கால்நடை வளர்ப்போர் சங்கம், நல்லூர் (கோண்டாவில்) இல் தீவனத்திற்கு முற்பணம் செலுத்தி தீவனம் எதுவும் இதுவரையில் பெற்றுக் கொள்ளாத பண்ணையாளர் 12.07.2008 இற்கு முன்னர் செலுத்திய முற்பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இதன் பிரகாரம் 12.07.2008 இற்கு பின் முற்பணம் செலுத்திய அனைவரும் தீவனம் பெற்றுக் கொண்டதாக கருதப்படும்.
தலைவர்
(76068) கா.வ.க. சங்கம் நல்லூர்.



### 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை
(முன்னாள் உரிமையாளர், கிருஷ்ணபிள்ளை & சன்ஸ்)
மலர்வு: 15.11.1918
உதிர்வு: 04.07.2003
திதி: 07.07.2008

அன்பு உள்ளம் கொண்ட ஐயாவே!
ஆயிரம் உறவுகள் இருந்தும் இனிய உறவுக்கு
உங்கள் நினைவு மட்டும் என்றென்றும்
நிறைந்திருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

601/2, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.
(76078)



### 31ஆவது நாள் நினைவஞ்சலி

உதிப்பு 29 . 03 . 1958
உதிர்வு 07 . 06 . 2008



அமரர் சின்னத்தம்பி மனோகரராசா

அன்பிலுயர் இதயமாக மண்ணில் வாழ்ந்திருந்தீர்
அன்புமொழி பேசியெமை அரவணைத்திருந்தீர்
அன்புடன் எம்முயர்வில் மகிழ்ந்திருந்தீர்
அத்தனையும் மறந்து எம்மைவிட்டு மறைந்து விட்டீர்
துன்பமே தெரியாமல் எமைக் காத்து வந்தீர்
துயரத்தில் எமைவிட்டு இறைவனடி காணச்சென்றீர்
வல்லையில் காத்திருந்து காலனவன் கவர்ந்தானே
எப்போது உமைக் காண்போம் அப்பாவே!

புத்தூர் வடக்கு,
புத்தூர்.
(சி/553617)
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.



### தவறிவிட்டது

சண்முகநாதன் கமலநாதன் என்பவரது தே.அ.அட்டை (இல 630420768V), வி.அ. அட்டை, தொழில் அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிற கைப்பை ஒன்று உடுவில் லவ் லேன் வீதியில் 20.06.2008 அன்று தவறிவிட்டது. இக்கைப்பையை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சன்ராஜ் கொம்பிளெக்ஸ், கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் (நாகம்ஸ் தியேட்டருக்கு முன்பாக) எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P:- 021 222 5911



### பணிப்பெண் தேவை

வேலைக்குச் செல்லும் தம்பதியினருக்கு வீட்டு வேலை செய்வதற்கு வீட்டுப்பணிப் பெண் தேவை.
தொடர்பு: S.Dishanthan
T.P: 021 222 8232



### 15ஆம் ஆண்டின் இதயம் விட்டகலா நினைவுகள்

மலர்வு 12 . 03 . 1941
உதிர்வு 08 . 07 . 1993



அமரர் சிதம்பரி மகேந்திரன்
(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)
"இதயத்தில் சுரக்கும் நினைவுகள்
இமைகளில் ஈரமாய் கசிகின்றன."
உங்கள் ஆழமான அன்பே என்றும்
அகத்திலிருந்து வாழும்.
நாகம்மாள் கோயிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
குடும்பத்தினர்.
(சி/553622)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு கல்விவலய ஆசிரிய ஆலோசகர் சங்க அனுசரணையுடன் கல்வி வளவாளர் நிலையம் அண்மையில் நடத்திய
க.பொ.த (உயர்தர) முன்னோடிப் பரீட்சை வினாத்தாள் - ஒகஸ்ட், 2008

# தமிழ்

3 மணித்தியாலங்கள்

## தமிழ் - 01, பகுதி - I

முதலாம் பகுதியில் உள்ள இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் உள்ளவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடைதருக.

01. பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவுசெய்து
அ. அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ. தடித்த எழுத்துக்களிலுள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

1) மையற விளங்கிய மணி நிற விசும்பின்
கைதொழு மரபின் எழுமீன் போலப்
பெருங்கடல் பரப்பின் இரும்புற தோயச்
சிறுவெண் காக்கை பலவுடன் ஆடுந்
துறைபுலம்பு உடைத்தே தோழி பண்டும்
உள்ளூர்க் குரீஇக், கருவுடைத் தன்ன
**பெரும்போது அவிழ்ந்த கருந் தாட் புன்னைக்**
கானலங் கொண்கன் தந்த
காதல் நம்மொடு நீங்காமாறே.

2) இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு?

இடுக்கண் கால் கொன்றிட வீழும் **அடுத்தூன்றும்**
**நல்லாள்** இல்லாத குடி.

இரவாரி ரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் **நல்கூர்ந்தார்**
சொற்பொருள் சோர்வுபடும்.

3) ஐய! நீ யாது ஒன்றும் அவலிப்பாய் அலை;
உய் திறம் அவற்கு இனியிதனினூங்குண்டோ
செய்வன வரன்முறை திருத்திச் சேந்த நின்
கையினா லொழுக்குதி கடனெ லாமென்றான்

**விண்ணுநீர் மொக்குளின் விளியும் யாக்கையை**
யெண்ணிநீ யழுங்குத லிழுதைப் பாலதால்
கண்ணினீ ருகுத்தலிற் கண்டதில்லை போய்
மண்ணுநீ ருகுத்தி நீ மலர்க்கை யாலென்றான்.

4) பெண்ணீர்மை குன்றாத பெய்வளையாரிவ் **வண்ணம்**
**புண்ணீருந் தீயிற்பு கைந்தாரு யிர்பொடிப்பக்**
கண்ணீரின் **துன்பக் கடற்கெல்லை காணாராய்**
எண்ணிர ராய்ச்செல்லு மெம்பெருமான் பின் சென்றார்.

மைத் தடங்கண் ணீர்சொரிய வாய்விட்ட முதரற்றிச்
சித்த முடைந்து தொடர்ந்துவரு சேயிழையார்
பத்திமையுஞ் சிந்தைப்ப ருவரலுங் கண்டிரங்கி
உத்தமசற் போதவு பசாந்த ரீதுரைப்பார்.

02. 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

'அ' பெட்டிக்கடை நாரணன்
நாரணன் பெட்டிக்கடையின்
நாமமே பரவலாச்சு
இன்று கடன் இல்லை என்ற
எச்சரிக்கை எதிரே இருக்கும்
என்பேச்சு தேனாய்ச் சொட்டும்
குழைவிலே வாங்குவோர்கள்
வண்டாகி, பின்னர்
வாடிக்கைக்காரர் ஆக
ஆண்டிரண்டோடும் முன்னே
தத்துவங்கள் பொய்க்கக் கண்டேன்
பல தத்துவங்கள் கவிழக் கண்டேன்
உயிரற்ற ஜடத்தில் பெருக்கம்
உண்டாகாதென்ற கொள்கை
பொய்ப்பதை நானே கண்டேன்
இருபது ருபாய் முதலே
இரு நூறாக மாறி
ஏற்றம் எனக்களிக்க
உருமாலை வாங்கிக் கொண்டேன்
ஓராளென ஆகிவிட்டேன்
அகமடியார் தெருவில் சின்ன
அங்கயற்கண்ணி மளிகைக்
கடையொன்று வைத்துவிட்டேன்
சம்பளத்தை அள்ளிவீசச்
சுரங்கம் சுரக்கவில்லை
தோதாகப் பொடிப் பையன்கள்
சம்பளமில்லா துழைக்க,
தொழிலிலே தேர்ச்சி கொள்ள
முன் வந்து தொங்கவில்லை
எனவே
கோழியுடன் எழுந்திருந்து
கோட்டானுடனே துயிலும்
கோலமே வாழ்க்கை ஆச்சு
சரக்கோ கொஞ்சம்
எட்டு மணி நேரம்
தட்டாது விற்றால்
தட்டில் மிச்சம்
தங்கியிருக்குமா?
இப்படி இருக்க
எலிவேறு இரவில்
இராஜ்யம் வகித்தால்
என் உருமாலை மட்டும்
கிழியாமல் போமா?
போனாலும் நீண்ட விழியாளின் அருள்
நீங்கவில்லை
முதலுக்கும் மோசம்
மருந்துக்கும் காணோம்.

1) இக்கவிதையின் பிரதான பாத்திரமான பெட்டிக்கடை நாரணனின் குணப் பண்புகளைக் குறிப்பிடுக.
2) பெட்டிக்கடைக்காரனாக இருந்த நாரணன் வியாபாரியாக உயர்ந்த நிலை எவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது?
3) பின்வரும் அடிகளை விளக்குக.
   அ. உருமாலை வாங்கிக்கொண்டேன் ஓராளென ஆகிவிட்டேன்.
   ஆ. கோழியுடன் எழுந்திருந்து கோட்டான் உடன் துயிலும் கோலம்.
   இ. நீண்ட விழியாளின் அருள் நீங்கவில்லை.
   ஈ. முதலுக்கு மோசம் மருந்துக்கும் காணோம்.
4) கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்துக்களை எத்தகைய உத்திகளைக் கையாண்டு வெளிப்படுத்தியுள்ளார்?

அல்லது

ஆ. ஆங்கிலத் தொடர்பினால் உரைநடை வளரும்பொழுது நிறுத்தக் குறிகள் இட்டு எழுதும் வழக்கமும், பந்தி பிரித்து எழுதும் வழக்கமும், வசனங்களைச் சிறிதாகவும் தெளிவாகவும் எழுதும் வழக்கமும் தமிழில் வந்துசேர்ந்தன என்று கூறலாம். நிற்க, பண்டைத் தமிழறிஞர் இலக்கியங்களில் உரைநடையை மிகுதியாகக் கையாளவில்லை. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களையும் உரைநடை ஆசிரியர் எழுதிய உரைகளையுந் தவிர வேறு இடங்களில் உரைநடை இடம்பெறவில்லை. ஐரோப்பியர் தமிழ்நாட்டுடன் தொடர்பு பூண்டதன் பின்னரே தமிழ் உரை நடை வளர்ந்தது என கூறுதல் மிகையாகாது. இலக்கிய உரைநடை, பத்திரிகை உரைநடை ஆகிய இரண்டும் இக்காலத்தில் தமிழுக்குப் பெரிதும் ஆக்கம் கொடுத்தன, கொடுக்கின்றன. இலக்கிய வகைகளில் உரைநடை இலக்கியம் இன்று பெரிய நிலையை வகிக்கின்றது. நாவல், சிறுகதை, கட்டுரை, இலக்கியம், ஓரங்க நாடகங்கள் ஆகிய இவையாவும் மேல்நாட்டு தொடர்பால் தமிழுக்கு வந்தவை. இவற்றைவிட இக்காலத்து வெளிவரும் தமிழ் நூல்கள் பல ஆங்கில நூல்களையும், பிற நூல்களையும் தழுவி எழுதப்படுகின்றன. இன்னும் தமிழ்மொழியின் சிறப்புக்களையும், தனிப்பண்பையும் இன்று நாம் அறிய ஏதுவாக இருப்பது மேல்நாட்டு ஆராய்ச்சி முறையே என்பதை மறந்துவிடக்கூடாது. இரண்டு மொழிகளுக்கு இடையில் தொடர்பு ஏற்படும்போது கருத்துக்கள் பரிமாறப்படும். அவ்வாறு பரிமாறல் ஏற்படும்போது நாம் அம்மொழிகளில் சிறப்பானவற்றையே எடுத்து தமிழினை மேலும் சிறப்புறச்செய்தல் வேண்டும்.

1) மேல்நாட்டார் வருகையால் தமிழ் உரைநடை எவ்வெவ் வகைகளில் வளர்ச்சி பெற்றது?
2) ஆங்கிலத் தொடர்பினால் தமிழ் உரைநடையின் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
3) கருத்துப் பரிமாற்றத்தினால் கிடைக்கும் நன்மை யாது?
4) பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெளிவுபடுத்துக.
   அ. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.
   ஆ. தழுவி எழுதுதல்.
   இ. கருத்துப் பரிமாறல்.

## பகுதி - II

03. ''நல்குரவு'' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.
   அ. நல்குரவின் கொடுமை.
   ஆ. நல்குரவு ஏற்படுமிடத்து அதனால் நல்கூர்ந்தார் அடையும் துன்பம்.
   இ. நல்குரவு வருமிடத்து மேற்கொள்ளவேண்டியது.

04. திருவடி சூட்டுப் படலத்தில், இராமன் ஆளுதலே முறை என வசிட்டர் கூறியது முதல், பரதனே நாடாள வேண்டும் என இமையவர் கூறியது வரையான பகுதியூடாக பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.
   அ. சூரிய குலத்தின் சிறப்பு.
   ஆ. இராமன் ஆளுதலே முறை என்பதை வசிட்டர் எத்தகைய காரணங்களைக்கூறி நியாயப்படுத்துகிறார்?
   இ. வசிட்டர் கூறியவற்றை மறுத்துரைப்பதனூடாக இராமனுடைய உயர் பண்புகள்.

05. இராஜநாயகம் குர்பான் கொடுத்த படலத்தில்,
   அ. சுலைமான் நபியின் உயர் பண்புகள்
   ஆ. சுலைமான் நபி வாயிலாக முஹம்மது நபியின் சிறப்புகள்
   இ. கஃபதுல்லாவின் சிறப்பினை விளக்க கையாளப்பட்டுள்ள அணிகள் ஆகியன பற்றி விளக்குக.

06. கு.அழகிரிசாமியின் ''தவப்பயன்'' என்னும் சிறுகதையில்,
   அ. சுவாமி நிர்மலாநந்தர் என்ற கதாபாத்திரம் உருவாக்கப்பட்டிருக்கும் சிறப்பு.
   ஆ. மறுபிறப்புக் கோட்பாடு.
   இ. கதாசிரியரின் மொழிநடை பற்றி விளக்குக.

07. ''உயிர்பெற்ற தமிழர் பாட்டு'' என்ற கவிதையில் பாரதியார்,
   1) அ. புராணங்கள், ஸ்மிருதிகள், தவம், யோகம் என்பன பற்றிக் கூறும் கருத்துக்கள்.
      ஆ. காணவிரும்பும் சமூகமாற்றங்கள் என்பன பற்றி விளக்குக.
   2) அ. மொழிபெயர்ப்புக்கலை பாடவிதானத்தில் இடம்பெறவேண்டும் என்பதற்கு ''கலையும் காட்சியும்'' என்னும் கட்டுரையில் ஏ.எம்.ஏ.அஸீஸ் கூறும் காரணங்கள்.
      ஆ. வேற்றுமொழிப் பெயர்ச்சொற்களைத் தமிழில் எழுதும் முறை என்பது பற்றி விளக்குக.

08. பின்வருவனவற்றுள் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   அ. ''நளியிரு முந்நீரேணியாக........ '' என்னும் புறநானூற்றுச் செய்யுளில் எத்தகைய உத்திகளைக் கையாண்டு புலவர் அரசனுக்கு அறிவுரை கூறுகிறார்?
   ஆ. சோமசுந்தரப் புலவர் பாடலில், புலவர் ஆறுமுகநாவலர் மீதுகொண்ட பற்றும் அவரது சிறப்பும்.
   இ. ''நிலாவும் வான்மீனும் காற்றும்'' என்னும் கவிதையில் பாரதியார் மனதிற்கு கூறுபவை.
   ஈ. ''நாகம்மாள்'' நாவலில் கொங்குநாட்டுக் கிராமத்து மக்களின் வாழ்க்கைமுறை எடுத்துக்காட்டப்படும் முறை.
   உ. இராமநாடகக் கீர்த்தனையில் இராவணன் கொலுவீற்றிருந்த காட்சி.

(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி இனியும் வரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தரம் - 05 மாணவர்களுக்காக
## ஆசிரியர் பி.அம்பிகைபாகன் தொகுத்து வழங்கும்
## புலமை இலகுவழி பயிற்சிப்பரீட்சை

**சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**


01. இலக்கமிடப்பட்ட பகுதி முகம் அல்லாத உரு எது?




02. அதிக சதுரமுகிகளைக் கொண்டுள்ள உரு எது?




03. ஏதோ ஒரு வகையில் வேறுபட்ட உரு எது?





**கணிதச் செயற்பாடுகளை அவதானித்து விடையைத் தெரிவுசெய்யவும்.**

04. ○+○+○+△=5 இதன்படி ○ இன் பெறுமதி யாது?
1) 1 2) 2 3) 3

05. △×△+△= 20 இதன்படி △ இன் பெறுமதி யாது?
1) 3 2) 4 3) 5

06. ◻ + △ = 9 , △ × △ = 9 இதன்படி ◻ இன் பெறுமதி யாது?
1) 12 2) 6 3) 3

**X, Y, Z என்னும் இடங்களிலிருந்து நிமல், விமல், கமல் என்போர் முறையே A, B, C என்னும் இடங்களை அடைந்தார்கள்.**





07. இவர்களில் Z என்ற இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்தவர் யார்?
1) நிமல். 2) விமல்.
3) கமல்.


08. இம்மூவரில் அதிகதூரம் பயணம் செய்தவர் யார்?
1) நிமல். 2) விமல்.
3) கமல்.

09. இவர்களில் அதிக தடவைகள் இடதுபக்கம் திரும்பியவர் யார்?
1) நிமல். 2) விமல்.
3) கமல்.


10. பிராணிகளின் வாழிடத்திலேயே உணவும் கிடைக்கக்கூடிய வாழிடம் பின்வருவனவற்றுள் எது?





11. கட்டடங்களில் ஏணி வைக்கப்பட்டுள்ள பின்வரும் முறைகளில் அபாயகரமானது எது?





12. பின்வருவனவற்றுள் மிக விரைவாக எரியக்கூடியது எது?




13. உருக்களுக்குள் உள்ள மாபிள்களில் 3/5 பங்கு 6 ஆக வரக்கூடிய உரு எது?





14. உருக்களுக்குள் உள்ள முக்கோணிகளில் 1/8 பங்கு நிழற்றப்பட்டது எது?




15. அதிகூடிய பெறுமதியைக் குறித்துக்காட்டும் எண்கூட்டம் எது?




16. சரியான நேரத்தைக் காட்டும் கடிகாரம் எது?




**இல 17 ஆம், 18ஆம் வினாக்களிலே தொடக்கத்தில் தரப்பட்டுள்ள றைப் பற்றிய சரியான முடிவைத் தெரிவுசெய்க.**

17. பாடசாலைச் சேவை பேரூந்து நேரம் தவறாமல் பாடசாலைக் வருகின்றது.
1) இது பெரும்பாலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.
2) இது ஒருபோதும் நடைபெறுவதில்லை.
3) இது எப்பொழுதும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

18. முயன்றால் வெற்றியீட்டலாம்.
1) இது எப்போதும் உண்மையாகும். 2) இது பெரும்பாலும் உண்மையாகும்.
3) இது ஒருபோதும் உண்மையானதன்று.

**இல 19ஆம், 20ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள இரு வாக்கியங்களினதும் கருத்திற்கேற்பச் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.**

19. முரளியின் வீடு சங்கரின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது. சங்கரின் வீடு மோகனின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது. ஆகவே,
1) முரளியின் வீடு மோகனின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது.
2) மோகனின் வீடு முரளியின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது.
3) மோகனின் வீடு சங்கரின் வீட்டிலும் பார்க்க முரளியின் வீடடுக்கு அண்மையில் உள்ளது.

20. காற்று வீசினால் வெப்பம் குறையும். காற்று வீசவில்லை. எனவே,
1) வெப்பம் அதிகரிக்கின்றது. 2) வெப்பம் குறைகின்றது.
3) வெப்பம் மாறாதிருக்கின்றது.

**இல 21 முதல் 24 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவுசெய்க.**

21. சிறுதுளி பெருவெள்ளம்.
1) மெல்ல மெல்லப் பெய்யும் மழை பெரு வெள்ளமாகும்.
2) சிறுகச் சிறுகச் சேமித்தால் பெருஞ்செல்வம் சேரும்.
3) ஓட்டைப் பானையால் சிறுதுளி நீர்மட்டும் வெளியேறும்.

22. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.
1) தருமம் செய்யாப் பொருள் நெருப்பில் எரியும்.
2) தருமம் செய்யாப் பொருளைத் தீயவர்கள் எடுப்பார்கள்.
3) தருமம் செய்யாப் பொருள் தீயிலும் பயன் கூடியது.

23. சீனா சென்றாயினும் சீர்கல்வி தேடு.
1) முயற்சி செய்து அறிவைத்தேடு. 2) பணத்தைக் கொடுத்து அறிவைப்பெறு.
3) வெளிநாடு சென்று அறிவைப்பெறு.

24. புலி பசித்தாலும் புல் தின்னாது.
1) பெரியவர்கள் வறுமையிலும் தவறு செய்யார்கள்.
2) மிருகங்கள் புல் தின்பதில்லை. 3) புலிக்குப் பிறந்தது பூனை ஆகாது.

25. குடும்பம் ஒன்றிலுள்ள உறுப்பினர்களை ஒழுங்குமுறையில் காட்டும் விடை எது?
1) அப்பா, அம்மா, அண்ணா, தங்கை, நான்.
2) நான், தங்கை, அப்பா, அம்மா, அண்ணா.
3) அப்பா, அம்மா, அண்ணா, நான், தங்கை.


26. 60 கிலோகிராம் சீனியை இரண்டு சம பாகங்களாகப் பிரித்து, அதில் ஒரு பகுதியை ஐவர் தமக்கிடையே சமமாகப் பகிர்ந்துகொண்டனர் ஆயின், அதில் இருவருக்குக் கிடைத்த சீனியின் அளவு யாது?
1) 5 kg 2) 12 kg 3) 18 kg

27. கீழே குறிப்பிட்டுள்ள எழுத்துக்களைக் குறிக்கும் எண்களை ஏறு வரிசையில் ஒழுங்கமைத்தால் இரு சொற்கள் உருவாகும். அவை முறையே,


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 - து | சா - 12 | எ - 2 | 14 - லை | 10 - ட | 4 - ம | பா - 8 |

1) சாலை எமது. 2) பாடல் எது? 3) எமது பாடசாலை.


28. பாடலில் விவரிக்கப்பட்டுள்ள பறவையைத் தெரிவுசெய்க.
உணவுக்காகப் பழங்களை உண்ணும், வானத்தில் வேகமாகச்
செல்லும், உடல் பச்சை நிறமாய் இருக்கும் பறவை ஒன்று.




29. பாடலில் விவரிக்கப்பட்டுள்ள மலரைத் தெரிவுசெய்க.
மாலையில் மலரும், வெள்ளை நிறமானது,
மணம் வீசும், மனதைத்தொடும் மலர் ஒன்று.




30. கீழே தரப்பட்டுள்ள உருக்களுக்கிடையே உள்ள தொடர்பை நன்கு அவதானித்து விளங்கி சரியான விடையைத் தெரிவுசெய்க. உதாரணம்:- A:G




1) B:F , C:H , D:E 2) B:H , C:F , D:E 3) B:H , C:E , D:F

31. பின்வரும் கூற்றுக்கள் எப்பொழுதும் உண்மையாக இருப்பின் "சரி" எனவும், சில வேளைகளில் மட்டும் உண்மையாக இருப்பின் "பிழை" எனவும் அடைப்புக்குள் எழுதுக.
1) நாற்காலிக்கு நான்கு கால்கள் உள்ளன. ( )
2) மலர்மாலையிலிருந்து வாசம் வீசும். ( )
3) மாதம் ஒன்றில் முப்பது நாட்கள் உள்ளன. ( )
4) ஒரு நாள் 24 மணித்தியாலங்களைக் கொண்டது. ( )
5) குரைக்கும் நாய் கடிக்காது. ( )

32. இப்புதிர்களுக்கு ஓர் எழுத்தில் விடை தருக.
1) சிரித்துக்கொண்டே இருக்கும் எழுத்து. ..............................
2) கேட்டுக்கொண்டே இருக்கும் எழுத்து. ..............................
3) துரத்திக்கொண்டே இருக்கும் எழுத்து. ..............................
4) தொட்டால் சுடும் எழுத்து. ..............................
5) வலியால் துடிக்கும் எழுத்து. ..............................

**திருத்தமான கருத்தைத் தரும் சோடி வாக்கியங்களைத் தெரிவுசெய்க.**

33. 1) நாம் பாதுகாக்கப்படவேண்டியது சுற்றாடல் ஆகும். அப்போது நாம் சுற்றாடலைப் பாதுகாப்போம்.
2) எங்களைச் சுற்றாடல் பாதுகாக்க வேண்டும். அப்போது நாம் சுற்றாடலைப் பாதுகாப்போம்.
3) நாம் சுற்றாடலைப் பாதுகாக்கவேண்டும். அப்போது சுற்றாடல் எங்களைப் பாதுகாக்கும்.

34. புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைவேன் என்று சாந்தன் கூறுகிறான். அவன் இவ்வாறு கூறுவது,
1) இப்பரீட்சையில் எவரும் இலகுவாகச் சித்தியடையலாம் என்பதனாலாகும்.
2) அவன் பரீட்சைக்கு நன்கு தயாராகி இருந்ததனாலாகும்.
3) இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை நடைபெறுவதனாலாகும்.

35. பிள்ளைகள் மூத்தோருக்கு மரியாதை செய்யப் பழகுதல் வேண்டும். இதற்குரிய காரணம்,
1) மூத்தோரினால் பிள்ளைகளுக்குத் தண்டனை வழங்க முடியுமாகையால்.
2) மூத்தோர் நோயினால் வருந்துவதனால்.
3) மூத்தோர் பிள்ளைகளைவிட அனுபவம் நிறைந்தவராகையால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வல்வை சிவகுரு வித்தியாசாலையில் இடம்பெற்ற கண்காட்சி நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலையின் முன்னாள் அதிபர் எஸ்.வெங்கடாசலம் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் பாடசாலை அதிபர் எஸ்.சிவநாதன் காணப்படுகிறார்.
கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பொருள்களையும் கண்காட்சியை மக்கள் பார்வையிடுவதையும் ஏனைய படங்களில் காணலாம். *(படங்கள் : சுந்தா)*

### *கலைத்தூது அழகியல் கல்லூரியின்*

## டிப்ளோமாப் பரீட்சைகளை நடத்த இந்தியாவிலிருந்து பரீட்சகர்கள் வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் டிப்ளோமாக் கற்கைநெறிகளின் செய்முறைப் பரீட்சைகளை நடத்துவதற்காக இந்தியாவிலிருந்து பரீட்சகர்கள் வருகை தந்துள்ள னர்.

ஜூன் மாத முற்பகுதியில் ஆரம்பமாகி நடைபெற்று வரும் பரதநாட்டிய முதுகலைமாணி, நுண்கலைமாணி, டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான பரீட்சைகளின் செய்முறைப் பரீட்சைகளை நடத்துவதற்காகவே இந்தியாவிலிருந்து கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி விரிவுரையாளர்களான பேராசிரியர் எஸ். மதன்குமார், கலாநிதி எஸ்.சுப்பிரியா ரவிக்குமார் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார் கள்.

இவ்வார இறுதிவரை யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கவுள்ள இவ்விரு விரிவுரையாளர்களும் தற்போது பரதநாட்டிய கற்கை நெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகளை நடத்தி வருவதுடன் நடன வகுப்புக்களையும் நடத்தி வருகின்றார்கள்.

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து வளாகம் பட்டப் படிப்புக்கள் கடந்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202)

## தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 7

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் புதிய யாப்பின் பிரகாரம் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களைப் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் பிரகாரம் இம்மாதம் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றுக்கான புனரமைப்புக் கூட்டங்கள் பின்வரும் திகதிகளில் அந்தந்த கிராம அலுவலர் பணிமனைகளில் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் செ.உமாபாலன் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பாலாவி கிராம அபிவிருத்திச் சங்கமும் பிற்பகல் 4 மணிக்கு வெள்ளாம் போக்கட்டி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டன.

12 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கைதடி மத்தி மாதர் கிராம அபிவிருத்தி சங்கமும், பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும்,

13 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சங்கத்தானை கிராம அபிவிருத்திச் சங்கமும், பிற்பகல் 3 மணிக்கு மட்டுவில் கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும்,

14 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கோயிற்குடியிருப்பு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும்,

19 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மீசாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும், பிற்பகல் 3 மணிக்கு சரசாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும்,

20 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கைதடி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும்,

21 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கைதடி - நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்கமும் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)




### நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் நியமனம்

வேலணை, ஜூலை 7

தீவகக் கல்வி வலயத்திலுள்ள கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள் ளனர்.

ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு வே.முரளிதரன், செல்வி இ.ஞானவதி ஆகியோரும்,

வேலணை கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு திருமதி ஆர்.தமயந்தி, செல்வி கே.சுகந்தி ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நெடுந்தீவு கோட்டக் கல்வி அலுவல கத்திற்கு நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202-267)

### தமிழ்மொழிமூல வினாடிவினாப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 7

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளின் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான தமிழ் மொழிமூல கணித, விஞ்ஞான பாட வினாடி வினாப்போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான வகுப்பு மாணவர்களுக்கான ஆங்கில மொழி மூல வினாடிவினாப்போட்டிகளும் அன்றைய தினம் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203- 207)

## யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் விவசாய அபிவிருத்திச் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் விவசாய அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் வழி காட்டலுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச் செயற்றிட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் முதல்நிலை ஆசிரியர்கள் வகுப்பு ரீதியாக இத்திட்டத்தின் கீழ் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கென நிலமும் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. (202)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வலிகாமம் தெற்கு பிரதேசசபையினர் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சிரமதான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தியாகராஜ வீதியிலும் நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு உசத்தியோடை இந்து மயானத்திலும் சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளது. (203)

* * *

யாழ். தேசியக்கல்வியியற் கல்லூரியினர் நடத்தும் குழந்தை அரங்க குதூகலிப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி கலந்துகொள்வார்.

பரிசில்களை தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி குயின் ஜெசீலி கலாமணி வழங்குவார். (203-86)

* * *

மந்திகை, ஜூலை 7

பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவில் இடம்பெறவுள்ளது.

வலயக்கல்வி அலுவலக நிர்வாக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். (203-218)

## இ.போ.ச.பொன்விழா மலர் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 7

இலங்கை போக்குவரத்துச் சபையின் 50 ஆவது ஆண்டு பொன்விழாச் சிறப்பு மலர் வெளியீட்டு நிகழ்வு இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள இ.போ.ச. பயிற்சிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்வில் 'உதயன்' பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் இ.போ.ச முன்னாள் ஊழியர் களும் கௌரவிக்கப்படவுள்ளனர். பிரதம விருந்தினர் நூலை வெளியிட்டு வைப்பார். (203)

### பாடசாலை தொகை மதிப்புச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான பாடசாலை தொகை மதிப்புச் செயலமர்வு நாளை மறுதினம் காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் மற்றும் தொகை மதிப்பு வேலைக்குப் பொறுப்பான ஆசிரியரும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## குழந்தைகளின் ஆளுமை புதிய பரிமாணங்களில் விருத்தி செய்யப்பட வேண்டியது அவசியம்

### ஆசிரியர் வள முகாமையாளர் கருத்து

நல்லூர்,ஜூலை7

குழந்தைகளின் ஆளுமை புதிய பரிமாணங்களில் விருத்தி செய்யப்பட வேண்டும். அதற்கான ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு ஆளுமைத் திறன்மிக்க ஆசிரியர்களே உதவ வேண்டும்.

இவ்வாறு யாழ்.வலய ஆசிரியர் வள முகாமையாளர் ஞா.இரத்தினசிங்கம் ஆலோசனை வழங்கினார்.

கோப்பாய் ஆசிரியர் கல்லூரியின் ஆரம்பக் கல்வி ஆசிரிய மாணவர்கள் மன்றத்தின் கலைத்திறன் விழா மன்றத்தின் தலைவர் க.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

புதிய பரிமாணங்களில் ஆளுமை விருத்தியை மேற்கொள்ளலாம் என்று ஆய்வு தேவை. இதற்கு ஆளுமைத்திறன் பெற்ற நீங்கள் நிறையவே உதவலாம்.

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாடசாலை பெரியதா? சிறியதா என்ற சிந்தனைகள் அனாவசியமானது. பெரிய பாடசாலைக்குப் போவோர் தூணோடு சாய்ந்து கொண்டிருப்பார்கள். சிறிய பாடசாலையில் கற்பிப்போர் தூணாக நிற்பார்கள் என்று கூறுவதுண்டு.

நீங்கள் திறமை மிக்கவர்கள், எதையும் சாதிக்கக் கூடியவர்கள். உங்கள் தரத்தை மேம்படுத்திக் கொண்டு ஆரம்பக் கல்வியூடாக ஒரு செம்மையான சமுதாயத்தை உருவாக்குங்கள் - என்றார்.

கல்லூரி அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

மாணவர்களின் கலைத்திறன் மற்றும் திறமைகளை இனங்கண்டு அவர்களை சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக மாற்றும் பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்தது. இதில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு முக்கிய பங்குண்டு. குழந்தைகள் உங்களை நடமாடும் தெய்வமாகவே பார்க்கிறார்கள்.

சிறிய பிள்ளைகளுடன் மிகவும் கூடுதலான நேரத்தைச் செலவிடுபவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே. அந்தக் குழந்தைகளின் கல்விச் செயற்பாடுகள் தகுந்த முறையில் மேற்கொள்ளப்பட்டால்தான் அடுத்த நிலைகளில் அவர்கள் தமது கல்வியில் ஆர்வம் செலுத்தக் கூடியதாக இருக்கும். எமது மக்கள் பாராட்டும் வகையில் உங்கள் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

உங்கள் சொந்த வாழ்க்கையிலும் பிறருக்கு உதவுவதிலும் சமூகத்தை வழி நடத்துவதிலும் அக்கறையுடன் இருப்பதன் மூலம் கல்விச் சமூகத்தின் பெருமையை விளங்க வைப்பவர்களாகவும் வாழுங்கள். எமது கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பவர்களாவீர்கள் - என்றார். (202-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**புவனேந்திரன் செந்தில்ரூபன்**

B.Sc.(Engineering) Hons. 1st Class
AMABE, MIEEE

இன்று(07.07.2008)திங்கட்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (Health Development - Colombo Medical Faculty) P.G .H.D. பட்டம் பெறுகின்றார். இவர் மேன் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

உறவினர்கள்,
யாழ்ப்பாணம். (76075) நண்பர்கள்.

## சண்டிலிப்பாய் பிரதேச முதியோருக்கு அ.அட்டை

வலி.தென்மேற்கு, ஜூலை7

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் 60 வயது கடந்த முதியவர்களுக்கு முதியோர் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கு விண்ணப்பம் செய்பவர்கள் தத்தமது பகுதி முதியோர் சங்கத்தின் ஊடாக பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும் என்று பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

(202-135)

## 'சிசு உதான' கணக்கு உள்ள சிறார்களுக்குப் பரிசில்

மக்கள் வங்கியின் 47 ஆவது ஆண்டு பூர்த்தியையிட்டு சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் 'சிசு உதான' கணக்கு வைத்துள்ள சிறார்களுக்கு பரிசில்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறார்களின் 'சிசு உதான' கணக்கில் உள்ள தொகைக்கேற்ப பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாக கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

999 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 16 33 44 48

04-07-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5798979 - 5814928

ஜக்பொட் பரிசு ரூபா. 2,553,400/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 350,501 | 10/- | 3,505,010/- |
| 2 இலக்கங்கள் | 32,162 | 20/- | 643,240/- |
| 1 இல. + லக்கினம் | 31,725 | 30/- | 951,750/- |
| 2 இல. + லக்கினம் | 2,938 | 100/- | 293,800/- |
| 3 இலக்கங்கள் | 857 | 500/- | 428,500/- |
| 3 இல. + லக்கினம் | 77 | 5,000/- | 385,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,553,400/- | 2,553,400/- |
| மொத்தம் | | | 9,160,700/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 418,270 | | 9,660,700/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இலக்கம் 4913628 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஜூலை 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| நுவரெலியா | 5814140-6-40 |
| கேகாலை | 5806912-4-10 |
| மொனராகலை | 5813815-1-48 |
| மட்டக்களப்பு | 5811111-1-24 |
| குருநாகல் | 5802010-4-02 |






இப்போது விற்பனையில்

புதிய விலை ரூ 35/-

இந்திய ராஜதந்திரத்தைத் தனியொருவராகப் பிய்த்து உதறினார் இரா.சம்பந்தன் 7 ஆம் பக்கத்தில்

ரணிலை ஐ.தே.க. தலைமையிலிருந்து அகற்றும் பின்னணியில் அயல் தேசம்

சிங்களத் தேசியத்துக்கு என்றும் சவால் தமிழ்த் தேசியமே

கே.வி. எழுதும் நள்ளிரவில் ஒரு நாடகம் திகில்..! திகில்..!!

கலைச்செல்வியை செதுக்கிய சிற்பி

கவிதைப் புனல்

காதல் திருமணங்கள் வெற்றியே..!

மற்றும் வழமையான உங்களுக்கு பிடித்த பல்சுவை அம்சங்கள். உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.

இப்போது விற்பனையில்


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இரத்தினசாமி சுப்பிரமணியம்**
(நியூ லக்சுமி சில்க் உரிமையாளர்)

தோற்றம்
23.04.1946

மறைவு
30.06.2006

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டு
இன்றுடன் இரு ஆண்டுகள் சென்றாலும்
என்றென்றும் உங்கள் பாச விளக்கின் ஒளி
அணையாத தீபமாய் பிரகாசித்து கொண்டிருக்கும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
சித்திரமாய் நிறைந்திருக்கும் எங்கள்
அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்.....

உங்கள் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(அ/553826)


## எல்லையற்ற செய்தியாளர்கள்

REPORTERS WITHOUT BORDER

இது புதியது! புதினம் சொல்வது!!

உதயனின் சர்வதேசப் பதிப்பிலும் உதயன் பத்திரிகையிலும் உங்கள் பகுதியின் நிகழ்வுகளையும் சம்பவங்களையும் பதிவுசெய்யுங்கள்.

அது ஒன்றும் கடினமானது அல்ல.



உங்கள் பகுதியில் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புகளின் நிகழ்வுகளை எங்களுக்கு அறியத்தாருங்கள்.

புகைப்படங்களையும் அனுப்புங்கள்.

பலரும் சேர்ந்துள்ள இந்த அணியில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

இன்றே உரிய தரவுகளுடன் விவரங்களை
news@uthayan.com
photo@uthayan.com
எனும் ஈ-மெயில்களுக்கு அனுப்புங்கள்

புகைப்படங்கள், செய்திகளில் தமது பெயர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்புவோர் அதனைக் குறிப்பிடவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்திய, அமெரிக்கத் தேர்தல்களால் இங்கு தமிழர்களுக்கு நீதி கிட்டுமா?

இலங்கை இனப்பிரச்சினையை ஒட்டிய ஒரு முக்கிய விடயத்தை தமிழர் தரப்பு - விடுதலைப் புலிகள் தரப்பு - மீண்டும் மீண்டும் பாரத தேசத்துக்குச் சுட்டிக்காட்டி வருகின்றது.

'இந்திய அரசும் அதன் கொள்கை வகுப்பாளர்களும் இப்பிராந்தியத்தில் தங்களின் நேச சக்திகள் எவை, நண்பனாக வேடம் போட்டுக்கொண்டு குழிபறிக்கும் சக்திகள் எவை என்பதைச் சரியாக அடையாளம் காண வேண்டும்' - என்று புலிகள் உரிமையோடு இந்தியாவை வற்புறுத்தி வருகிறார்கள்.

அண்மையில் தமிழகத்தின் 'குமுதம்' இதழுக்குப் பேட்டியளித்த விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா.நடேசன், இந்திய விவகாரத்தில் இலங்கைத் தரப்பு நடந்துகொண்ட போக்கை வரலாற்றுப் பின்னணியோடு சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

''இந்திய - சீனப் போரின் போதும், இந்திய - பாகிஸ்தான் போரின்போதும், இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையே சிங்கள அரசுகள் எடுத்திருந்தமை வரலாறு. அப்போதெல்லாம் ஈழத் தமிழர்கள் இந்திய அரசுக்கு ஆதரவாகவே செயற்பட்டனர். ஆனால் இப்போது ஈழத் தமிழர் தமது சொந்த விடுதலைக்காக இரத்தம் சிந்திப் போராடும்போது, இந்திய அரசு சிங்கள அரசுக்கு உதவுகின்றதே......? அதை நிறுத்தி எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாகவே அது செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.'' - என்று நடேசன் கூறியிருக்கின்றார்.

புலிகள் தரப்பிலிருந்தும் ஈழத் தமிழர்கள் பக்கத்திலிருந்தும் விடுக்கப்படும் இத்தகைய வேண்டுகோள் புதுடில்லியின் காதில் ஏறுமா என்பதே கேள்வி.

ஆனால் தனது தற்போதைய பதவிக் காலத்தின் அந்தத்தில் - தான் ஆட்சியில் நீடிப்பதே உறுதியில்லை என்ற நிலையில் - அரசியல் செல்வாக்கு வறுமையில் சிக்கி - அல்லாடித் தள்ளாடிக் கொண்டிருக்கும் தற்போதைய மன்மோகன்சிங் அரசின் காதில் இந்தக் கோரிக்கை விழுவதோ அதை சாதகமாக அது பரிசீலித்து வலிமையான நடவடிக்கைகளில் இறங்குவதோ சாத்தியமேயற்ற விடயங்கள் என்பதை அரசியல் வட்டாரங்கள் உறுதிப்படுத்தி விட்டன.

அமெரிக்காவுடனான அணு ஆயுத ஒப்பந்தத்தைச் செய்வதா, இல்லையா என்ற 'இரண்டுங் கெட்டான்' நிலையில் தவித்துப்போய் நிற்கும் மன்மோகன் அரசால், இலங்கை விவகாரத்தில் நீதியின்பால் - நியாயத்தின்பால் - நின்று தீர்க்கமான முடிவு எடுக்க முடியாது என்பது திண்ணம். அதற்கான அரசியல் பற்றுறுதியும், துணிச்சலும், திடசங்கற்பமும் மன்மோகன் அரசிடமோ, அதற்குள் அதிகாரம் மிக்கவராக இன்று விளங்கும் சோனியா காந்தியிடமோ இல்லவே இல்லை என்பதும் தெளிவு.

தேவையானால், அண்மையில் தான் கொழும்புக்கு அனுப்பிய உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு போன்ற, செல்வாக்குள்ள குழுக்கள் மூலம் கொழும்புக்கு வாய் மூலமாக 'டோஸ்' கொடுக்கும் வேலைகளைப் புதுடில்லி செய்து பார்க்கலாம். அதற்கு அப்பால் கொழும்புக்கு அழுத்தம் கொடுத்து அதனை வழிக்கு வரப் பண்ணும் - அல்லது பணியவைக்கச் செய்யும் எந்தச் செல்வாக்கோ, தைரியமோ, ஆளுமையோ இன்றைய புதுடில்லி அரசுத் தலைமைக்கு அடியோடு கிடையவே கிடையாது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தனது இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளோடு கொள்கை ரீதியாகப் பகைத்துக்கொண்டு தன்னுடைய அரசையே ஸ்திரப்படுத்திக்கொள்ள முடியாது தடுமாறும் புதுடில்லித் தலைமை இலங்கை விவகாரத்தில் நீதியைக் கையில் தூக்கிக் கொண்டு, நியாயத்தை நிலைநிறுத்தப் புறப்பட்டால் அது 'மூஞ்சூறு தான் போகக் காணோமாம், அதற்குள் விளக்குமாற்றையும் தன்னோடு சேர்த்துத் தூக்கிக் கொண்டதாம்' என்ற மாதிரியாகிவிடும்.

எனவே தற்போதைய புதுடில்லி அரசிடம் இருந்து தமிழர்கள் நீதி, நியாயத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பதில் அர்த்தமில்லை.

எனினும், இலங்கை விடயத்தில் மன்மோகன்சிங் அரசின் கையறு நிலைமை குறித்து - இந்தியாவில் இவ்வருட முடிவில் அல்லது அடுத்த வருட முற்பகுதி யில் நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டி மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற பாரதீய ஜனதாக்கட்சியின் சார்பில் - அதன் தென்னிந்தியப் புலனாய்வுப் பிரிவு சென் னையில் அவசர அவசரமாகக் கூடி ஆராய்ந்திருக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் இன்றைய அவல நிலைமை குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றது. இரண்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவாம்.

* வடக்கில் தமிழர்களை அழிக்க இலங்கைப் படைகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக ஈழத் தமிழர்களின் கைகளைப் பலப்படுத்துவது.

* அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லும் சமஷ்டிமுறைத் தீர்வை ஆதரிப்பது.

- இவையே அந்த முடிவுகள் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஆக, அடுத்த வருடத்துக்குள் வரப்போகின்ற இந்தியப் பொதுத் தேர்தல் ஈழத் தமிழர்களுக்கு விடிவு தருவதாக அமையக்கூடும். இந்த நவம்பரில் அமெரிக்காவில் நடை பெறும் ஜனாதிபதித் தேர்தலின் முடிவும், இலங்கை போன்ற நாடுகளில் தமது உரிமைகளுக்காகப் போராடும் சிறுபான்மை இன மக்களுக்கு மீட்சி தர வழி செய்வதாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது.

ஈழத் தமிழர்களுக்கு அடுத்த வருடத்தோடாவது மீட்சி கிட்டலாம் என்ற நப்பாசையை - நம்பிக்கையை - இந்திய, அமெரிக்கத் தேர்தல்கள் தருவனவாக உள்ளன என்று மட்டும் இப்போதைக்குச் சொல்லலாம்.

# விடத்தல் தீவுக்குள் நுழைந்த படை அணிகள் இழப்புக்களுடன் திரும்பியதாக தகவல்

## மீட்பு அணிகள் அனுப்பியும் பயனில்லை என்கிறது 'லக்பிம'

கொழும்பு, ஜூலை 7

மன்னார்ப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை சிறிலங்காப் படையினரின் சிறப்பு அணியினர் மேற்கொண்ட சிறப்பு படை நடவடிக்கை தோல்வியில் முடிந்தது எவ்வாறு என்பது பற்றி கொழும்பில் இருந்து 'லக்பிம' ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டின் பாதுகாப்பு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு :

கடந்த வியாழக்கிழமை மாலை இராணுவத்தின் இரண்டாவது கொமாண்டோ றெஜிமென்டைச் சேர்ந்த 3 குழுக்கள் மன்னாரின் வட மேற்கு கரையோரம் உள்ள விடத்தல் தீவுப் பகுதிக்குள் உள்நுழைய முற்பட்டிருந்தன.

இந்தக் குழுவில் காட்டுப்புறச் சமருக்கு என சிறப்பு பயிற்சி பெற்ற பல கொமாண்டோக்கள் அடங்கியிருந்தனர். மிகவும் அதிகளவு ஆயுதங்களை சுமந்தவாறு நகர்ந்த இந்த அணி, விடுதலைப்புலிகளின்பதுங்கு குழிகளை அண்மித்த போது மோதல்கள் வெடித்தன. தலா நான்கு பேர் கொண்ட இந்த மூன்று அணிகளுக்கு சார்ஜன் அசித குமார, கோப்ரல் வணசிங்க, லான்ஸ் கோப்ரல் இந்திய குமார ஆகியோர் தலைமை தாங்கினர்.

மோதல்கள் மிகவும் உக்கிர நிலையை அடைந்த போது வான் தாக்குதல் உதவிகளை இந்த அணி கோரியிருந்தது. அதனைத் தொடர்ந்து எம்.ஐ-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளும் தாக்குதலில் இணைந்து கொண்டன.

மோதல்கள் தொடர்ந்தன. விடுதலைப் புலிகளின் பதுங்குகுழியை அண்மித்த சார்ஜன் குமார ஆர்பிஜி தாக்குதலில் சிக்கிக் கொண்டார். அதனைத் தொடர்ந்து கோப்ரல் வணசிங்கவும் காயமடைந்ததுடன், பின்னர் மரணத்தை தழுவியிருந்தார். 12 பேர் கொண்ட இந்த அணியினர் ஆரம்பித்த மோதல்கள் 5 மணி நேரம் நீடித்தன.

### மீட்பு அணி சென்றது

இதனைத் தொடர்ந்து இராணுவம் மீட்பு அணி ஒன்றை அனுப்பியது. இந்த அணியினருக்கு லெப்.கொல்லுரை தலைமை தாங்கியிருந்தார். எனினும் விடுதலைப்புலிகளின் கடுமையான தாக்குதலில் சிக்கி கொல்லுரையும் காயமடைந்தார்.

தமது தரப்பில் இழப்புக்கள் அதிகமாகி வருவதைஉணர்ந்த லயன் கோப்ரல் இந்திய குமார பின்வாங்கி தப்பிச் செல்வதற்கு தீர்மானித்ததுடன் எஞ்சிய கொமாண்டோக்களுடன் தமது நிலைகளுக்கு பின்வாங்கிச் சென்றார். இராணுவம் மேற்கொண்ட இந்த கொமாண்டோ தாக்குதல் தோல்வியில் முடிவடைந்ததில் 12 பேர் கொண்ட அந்த அணியையும், அவர்களுக்கு உதவிக்கு விரைந்த அணிகளையும் சேர்ந்த இரு கொமாண்டோக்கள் கொல்லப் பட்டதுடன், இருவர் காணாமற் போயிருந்தனர். மேலும் 10 பேர் காயமடைந்திருந்தனர்.

விடத்தல்தீவை குறிவைத்து இராணுவத்தின் 58 ஆவது படையணி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. விடுதலைப் புலிகளின் கடற் புலிகளின் தளம் அங்கு இருப்பதாக படையினர் தெரிவித்து வருகின்ற போதும், விடுதலைப் புலிகள் அந்தத் தளத்தை கைவிட்டு விட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இதனை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

பெரியமடுப் பகுதியில் கடந்த வாரம் நடைபெற்ற சமரில் சிறிலங்கா இராணுவத்தின் சமிக்ஞைப் பிரிவைச் சேர்ந்த ஒரு பிளட்டூன் படையினரில் (பொதுவாக ஒரு பிளட்டூன் 30 படையினரைக் கொண்டிருப்பதுண்டு) 25 பேர் விடுதலைப்புலிகளின் நேரடியற்ற சூட்டுத்தாக்குதல்களில் காயமடைந்ததாக அந்தச் சமரில் பங்குபற்றிய படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்திருந்தார்.

நான்காவது ஈழப்போர் இந்த மாதத்துடன் மூன்றாவது வருடத்தை அடைந்துள்ளது.

2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் நாள் சிறிலங்கா அரசாங்கம் மாவிலாறில் முழு அளவிலான போரைத் தொடங்கியது.

அதற்கு 3 நாள்களின் பின்னர் கிழக்கில் உள்ள 4 படை முகாம்கள் மீது விடுதலைப்புலிகள் கடுமையான தாக்குதலை தொடுத்திருந்தனர். பின்னர் வடபோர்முனையில் ஆரம்பித்த பெரும் சமர் நாலாம் கட்ட ஈழப்போரை தீவிர கட்டத்திற்கு நகர்த்தியிருந்தது.

இது மட்டும் ஜூலை மாதத்தின் முக்கியத்துவமல்ல, 25 வருடங்களுக்கு முன்னர் ஜூலை 23 ஆம் நாள் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட முதலாவது பெரிய பதுங்கித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### நெல்விளையும் பிரதேசம்

மன்னாரின் நெல்விளையும் பிரதேசத்தை கடந்த வாரம் தாம் கைப்பற்றியுள்ளதாக படைத்தரப்புதெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையில் இராணுவம் 170 க்கும் அதிகமானோரை இழந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் நாள்களில் நடைபெறப்போகும் மோதல்கள் அடர்ந்த காட்டுப்பகுதிகளை அண்மித்துள்ளன.

58 ஆவது படையணியின் இறுதி இலக்கு விடத்தல்தீவாகும். மன்னாரின் நெல்விளையும் பிரதேசத்தை கைப்பற்றுவதும் அதனை தக்கவைப்பதுமே 58 ஆவது படையணியின் உருவாக்கத்தின் நோக்கம்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நடவடிக்கை படையணி இரண்டு என்ற படையணி ஏ-9 பாதைக்கு மேற்குப் புறம் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# யாழ்.மருத்துவ பீடத்திற்கு நூறு பேரை அனுமதிக்க ஆணைக்குழுவால் விசேடதிட்டம் முன்வைப்பு

## தெரிவான சிங்கள, முஸ்லிம் மாணவர் கிழக்குப் பல்கலையில் கல்விபயில ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முழுக்கோட்டாவான 100 மாணவர்களை அனுமதிப்பதற்கு விசேட திட்டம் ஒன்றை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு வகுத்துள்ளதாக யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை காலமும் 100 மாணவர்களை மருத்தவ பீடத்துக்கு அனுமதிக்க முடியவில்லை. சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் யாழ்ப்பாணம் வரமுடியாத காரணத்தால் முழுக் கோட்டா வும் இங்கு கிடைக்கவில்லை.

இந்தக் காரணத்தால் இம்முறை விசேட திட்டம் ஒன்றைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு வகுத்துள்ளது என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அனுமதி வழங்கி அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர வாய்ப்பளிப்பது எனவும் அதற்கான செலவுகளை யாழ்.பல்கலைக்கழகம் கிழக் குப் பல்கலைக்கழகத்துக்கு வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன் அந்த மாணவர்களுக்கான பரீட்சைகளை யாழ். பல்கலைக் கழகமே நடத்தும் எனவும் அவர்களுக்கான பட்டச் சான்றிதழ் யாழ்.பல்கலைக்கழகத்தின் பெயரிலேயே வழங்கப்படும் எனவும் மேலும் தெரியவருகின்றது.

சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்களை இங்கு அனுமதிப்பதன் மூலம் அவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக வட் டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50)

# வளர்த்த மாடு நெஞ்சில் பாய்ந்ததில் உரிமையாளர் உடன் பலியானார்

யாழ்ப்பாணம் ஜூலை 7

இணுவில் காரைக்கால் பகுதியில் வளர்த்த மாடு ஒன்று மார்பில் பாய்ந்ததால் உரிமையாளர் ஒருவர் அந்த இடத்தி லேயே உடன் பலியானார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 6 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் காரைக்கால் மயானத்தின் காவலாளி யான ஆறுமுகம் இராசலிங்கம் (வயது 60) என்பவரே மரணமான வராவார்.

வழமைபோல் தமது மாட்டை தோட் டக்காணியில் கட்டுவதற்காக கூட்டிச்சென்றவேளைஆவேசம்கொண்ட மாடு அவரது நெஞ்சில் கொம்பால் இடித்தது. மயக்கமுற்று வீழ்ந்த அவர் அந்த இடத் திலேயே மரணமானார்.

இந்த மரணம் குறித்து யாழ். நீதிவான் இ.வசந்தசேனன் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்ப டைக்குமாறு உத்தரவிட்டார். (அ-25-78)

# குடத்தனையில் இருந்து மணல் ஏற்றிப்பறிக்க பார ஊர்திகளுக்கு செயலகத்தால் கூலி நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

குடத்தனையில் இருந்து மணல் ஏற்றிப் பறிப்பதற்கு பார ஊர்திகளுக்கு யாழ்.செயலகத்தால் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குடத்தனையில் இருந்து 2.25 கியூப் மணல் ஏற்றி இறக்கவே இந்தக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குடத்தனையில் இருந்து பருத்தித்துறைக்கு 6 ஆயிரத்தி 250 ரூபாவாகவும், கரவெட்டிக்கு 6 ஆயிரத்தி 750 ரூபாவும், கோப்பாய் 8 ஆயிரத்தி 500 ரூபாவும், நல்லூருக்கு 9 ஆயிரத்தி 250 ரூபாயும், தெல்லிப் பழைக்கு 9 ஆயிரம் ரூபாவும் நிர்ணயிக்கப்பட் டுள்ளது.

அத்துடன் உடுவிலுக்கு 9 ஆயிரம் ரூபாவும், யாழ்ப்பாணத்திற்கு 9 ஆயிரத்து 750 ரூபாவும், சண்டிலிப்பாய்க்கு 9 ஆயிரத்து 250 ரூபாவும், சங்கானைக்கு 9 ஆயிரத்து 500 ரூபாவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

காரைநகருக்கு 10 ஆயிரத்தி 500 ரூபாவும், ஊர்காவற்றுறைக்கு 12 ஆயிரத்தி 250 ரூபாவும், வேலணைக்கு 11 ஆயிரத்தி 750 ரூபாவும், சாவகச்சேரிக்கு 8 ஆயிரத்தி 500 ரூபாவாகவும் கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (203)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 24 | 08.07.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | பி.இ. 01.24 வரை |
| நட்சத்திரம் : | பூரம் |
| | [illegible] 10.27 வரை |
| [illegible] : | 10.28 - 11.58 |
| ராகுகாலம் : | 02.58 - 04.28 |

# 'சக்தி' தேவாவின் சடலம் தகனம்

யாழ்ப்பாணம், ஜூலை7

கல்லுண்டாய் பகுதியில் வைத்து அண்மையில் வெட்டிக் கொல்லப் பட்ட ஊடகவியலாளர் பரநிருபசிங்கம் தேவகு மாரின் சடலம் நேற்றுமுன தினம் தோண்டி எடுக்கப் பட்டு இந்து முறைப் படி அடக்கம் செய்யப் பட்டது.

இவரின் சடலம் அராலி மேற்கு, கொத் துறை மயானத்தில் புதைக்கப்பட்டிருந்தது. தேவகுமாரின் மனைவி நீதிமன்றத்துக்கு விடுத்த வேண்டுகோளுக்கு அமைய 37நாள்களின் பின்னர் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு தகனக்கிரியைகள் நடத்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால், கடந்த வாரம், நாவலர் கலாசார மண்டபத்தில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.
அஞ்சலி நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம்.
நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம். (111)

# இன்னும் 20 வருடங்களுக்கும் அதிகமாக விடுதலைப் புலிகள் செயல்படுவார்கள்

## இராணுவத் தளபதி கூறியதாக 'சண்டேலீடர்' விமர்சனம்

கொழும்பு,ஜூலை 7

தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னும் இருபது வருடங்களுக்கு அல்லது அதற்கு மேலும் செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள் என்று இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியிருப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே லீடர்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஓகஸ்ட் மாதத்துக்குள் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டிவிடுவோம் என்று அண்மைக் காலத்தில்தான் ராணுவத் தளபதியும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் கூறியிருந்தார்கள். இந்தப் பிரச்சினையை அடுத்த தலைமுறைக்கு விட்டு வைக்கப்போவதில்லையென்று இந்த இருவரும் தெரிவித்திருந்தார்கள் என்று அப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

இராணுவத் தளபதியின் கூற்றுப்படி 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு 9,000க்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளைக் கொன்றொழித்திருக்கிறார்கள். இருந்தும் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கப்போகிறது. இதன் கருத்து என்னவென்றால் இந்த டிசெம்பர் மாதத்துக்கு முன் யுத்தம் முடிவுறப் போவதில்லை. சாதாரணமாகச் சொல்வதென்றால் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டும் நிலையில் இந்த அரசாங்கம் இல்லை. பிரச்சினை அடுத்த தலைமுறைக்கும் நீடிக்கப் போகிறது என்பதுதான்-என்று சண்டேலீடர் எழுதியுள்ளது. அதுமேலும் கூறியுள்ளதாவது:

தமிழ்த் தேசியத்தில் நம்பிக்கை வைத்தவர்கள் இருக்கிறார்கள். இன்னும் இருபது வருடங்களுக்கு மேல் சுமார் 1000 போராளிகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் உயிர்வாழக்கூடும். ஆனால் நாங்கள் அதே முறையில் போராடிக் கொண்டிருக்கப் போவதில்லை. கிளர்ச்சிக்கலகங்கள் போன்று தொடர்ந்து இது இருக்கத்தான் போகிறது என்று ராணுவத் தளபதி பி.பி.ஸி.பேட்டியில் கூறியிருக்கின்றார்.

இராணுவத் தளபதியின் கருத்தை ஆழமாகப் பார்த்தால் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படாவிட்டால் இனப் போராட்டம் அல்லது கிளர்ச்சி எப்பொழுதுமே நடந்து கொண்டுதான் இருக்கப் போகின்றது. இப்படிக் கூறுவதானது பாதுகாப்பு அமைச்சின் இணையத்தள வழிகாட்டலின்படி ராஜத்துரோகக் குற்றச்சாட்டாகக் கருதப்பட முடியும்.

அதிகம் போனால் ஒருவருட காலத்துக்குள் புலிகள் பெரும்பகுதி நிலத்தை இழந்து விடுவார்கள். அதுவரைக்கும் நாட்டின் பொருளாதாரம் தாக்கு பிடிக்குமா? மக்களின் பொறுமையும் நிலைத்து நிற்குமா? அத்துடன் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச பொறுமை நீடித்து நிற்குமா? என்ற கேள்விகள் எழவே செய்கின்றன.

இந்த நிலைமையில்தான், சர்வதேச நாடுகளின் மனித உரிமை மீறல் தொடர்பான அழுத்தங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. போர் தொடருமானால் உரிமை மீறல்கள் அதிகரிப்பதோடு செலவினங்களும் அதிகரிக்கும். பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும். ஏற்கனவே பணவீக்கம் 30 வீதத்துக்குமேல் போய் விட்டது. வெளிநாட்டுச் செலாவணி சேமிப்பு தேய்ந்து கொண்டு போகின்றது.

### அமைச்சர்கள் கருத்து மோதல்

இந்த நிலைமைகள் குறித்து சில அமைச்சர்கள் கவலை கொண்டிருப்பதாக அவர்கள் தனிப்பட்ட முறையில் ராஜதந்திரிகள் மற்றும் நெருக்கமான நலன் விரும்பிகளோடும் உரையாடியிருப்பது வெளிப்பட்டு இருக்கிறது. சர்வதேச சமூகத்துடன் அரசு மேற்கொண்டுள்ள கடுமையான போக்குகள் அமைதி முயற்சியில் கண்டுள்ள தோல்வி, ஊடகக் கெடுபிடிகள் உட்பட மனித உரிமை மீறல்கள் குறித்து இவர்கள் கவலை கொண்டுள்ளனர். இவை பற்றி ஜனாதிபதிக்கும் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதிக்கு நன்றாகத் தெரியும். அவர் இப்பொழுது இராணுவ தீர்வுத் திட்டத்துக்குள் அடைபட்டுக் கிடக்கிறார். இப்போதைக்கு அதிலிருந்து மீட்சியில்லை. இந்த உண்மையை அண்மையில் ஜே.வி. பியிலிருந்து வெளியேறிய விமல் வீரவன்ச சரியாகவே சுட்டிக் காட்டியுள்ளார். சண்டையை நிறுத்தினால் அரசாங்கத்துக்கு அதோ கதிதான் ஏற்படும் என்று.

சொல்லப்போனால் அரசாங்கம் போரை நடத்தித்தான் ஆகவேண்டும்; பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக. வல்ல, அரசு நீடித்து உயிர்தரித்திருப்பதற்காக குற்றம் புரிகின்றவர்களைக் காப்பாற்றும் கலா சாரம் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பாக தமது வட்டாரத்துக்குள்ளேயே குமுறல்கள் தோன்றுவதை அறிந்த ஜனாதிபதி அதற்கு ஒரு முடிவு கட்டும் விதத்தில் கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் முயற்சியெடுத்துள்ளார். அது தான் உட்பூசல்கள் பற்றிய தகவல்கள் வெளிவருவதற்கு உதவி புரிந்துள்ளன.

"சில அமைச்சர்கள் வெளிநாட்டு முக்கியஸ்தர்களை அல்லது தூதுவர்களை சந்திக்கும்போது மனித உரிமைகள் தொடர்பாக எமது தரப்பை குறை கூறும் விதத்தில் விமரிசனங்கள் செய்வதாக அறிகின்றேன். காணாமல் போதல், ஆள்கடத்தல்கள் அதிகரித்திருப்பதாகவும், ஊடகத்துறையும் இம்சைக்குள்ளாவதாகவும் நிலைமை சீராக இல்லையென்றும் தெரிவித்துள்ளார்கள் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி இப்படிச் செய்யாதீர்கள். உங்களுக்கு கூட்டு பொறுப்பு உள்ளது. நான் பெயர் குறிப்பிடப் போவதில்லை, சம்பந்தப்பட்டவர்களுடன் தனிப்பட்ட முறையில் பேச விருக்கிறேன் - என்று தெரிவித்துள்ளார். (ப)

# ஜனாதிபதியின் கவலைகளை அதிகரித்துள்ள புதிய சிக்கல்கள்

## கருணாவின் வருகையும் ஒன்று

கொழும்பு,ஜூலை 7

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை ஜூலை முதலாம் திகதியிலிருந்து பிரான்ஸ் பொறுப்பெடுத்திருப்பதையொட்டியும் மூதூரில் பிரெஞ்சு மனித நேய அமைப்பின் பணியாளர்கள் 17 பேர் கொலையுண்ட சம்பவம் தொடர்பாகவும் எழக்கூடிய மனித உரிமை சிக்கல்கள் விடயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிக கவலை ஏற்பட்டிருப்பதாக 'சண்டேலீடர்' பத்திரிகை விமர்சித்துள்ளது. மூதூரில் மனித நேய பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட விடயத்தை பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'ஏசிஎப்' நிறுவனம் சர்வதேச ஆணைக்குழுவின் விசாரணைக்குவிட வேண்டும் என்று அண்மையில் கேட்டிருந்தது. இந்த விடயத்தை தீவிரமாகக் கவனத்தில் எடுப்பதற்கு ஆயத்தமாக விருப்பதாக பிரான்ஸ் அரசும் தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை அனுப்புவதற்கு பிரெஞ்சு அரசு கொழும்பிலுள்ள தனது தூதரகத்தில் தனியாக ஓர் அலுவலரை நியமித்துள்ளது. இவரது அறிக்கையின் மீதே பிரான்ஸ் இறுதித் தீர்மானம் ஒன்றை எடுக்கும்.

இதற்கிடையில் மூதூர் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தும் ஆணைக்குழுவில் அண்மையில் சாட்சியமளித்த சாட்சியொருவர் மேற்படி சம்பவம் நடந்த சமயம் இலங்கை ராணுவம் தான் அப்பகுதிக்குப் பொறுப்பாய் இருந்தது என்றும் கொலைஞர்களில் ஒருவராவது கடற்படையுடன் தொடர்புடையவராய் இருந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். இத்துடன் இங்கிலாந்திலிருந்து கருணா இலங்கை வந்திருப்பதும் அரசுக்குத் தலையிடியை அதிகரித்திருக்கிறது. மேலும் 1990ஆம் ஆண்டு 600 பொலிசாரை த.ஈ.வி.புலிகள் கொலை செய்தார்கள் என்ற விடயம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு அரசு தீர்மானித்திருக்கும் தறுவாயில் கருணா வந்து சேர்ந்துள்ளார். குறித்த படுகொலைகள் நடைபெற்ற சமயம் [illegible] புக்கு கருணாவே பொறுப்பாக இருந்துள்ளார்.

மேலும் கருணா இங்கிலாந்தில் அளித்த வாக்கு மூலத்தில் தாம் பொய்யான அடையாளத்தின் மீதே இலங்கையிலிருந்து பிரயாணம் செய்ததாக ஒப்புக்கொண்டிருந்தார். இந்த நிலையில் இலங்கைக்குத் திரும்பிய வேளையில் அவர் கைதுசெய்யப்பட்டிருக்க வேண்டும். அது நடைபெறவில்லை.

இந்த நிலையில் கருணாவுக்கு சலுகைக் காட்டப்பட்டிருப்பதாக சந்தேகம் எழுந்துள்ள அதே நேரம் எதிர்வரும் தேர்தல்களில் தாம் போட்டியிடப் போவதாகவும் கருணா அறிவித்துள்ளார்.

இந்த விடயம் எதிர்வரும் மாகாண சபை தேர்தல்களில் எதிர்க்கட்சி யினர்பெரிதாகப் பிரசாரம் செய்வதற்கு இடமளிப்பதாய் இருக்கும் என்று கருதப்படுகிறது.

இவ்வாறு சண்டேலீடர் எழுதியுள்ளது. (ப)

IBMS
அனேக மாணவரின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட கட்டணச்சலுகையில் புதிய பிரிவு ஆரம்பம்.
Diploma in Video Editing
(Adobe premier pro,Ved Cutter ,Video Studio, Nero Burning Software, Sound Forge 8.0,Pinnacle Studio Fx, Photoshop,Photo Impact)
Duration:- 3 Months Fees:-Rs.3500
அரச,தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர்,வர்த்தகத்துறை சார்ந்தோர், வர்த்தகத்துறையில் ஆர்வமுள்ளோர்,உங்களுக்காகவே ஆரம்பம்.
Diploma in Computrized Accounting
(Tally ,Quick Books,Peachtree)
Duration:- 3 Months Fees:-Rs.3500
அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவு ஆரம்பம்.
ஆரம்பம்:- 10-07-2008 காலை 10.00 மணி
இவ் அரிய சந்தர்ப்பத்தை பயனுள்ளதாக்கிக் கொள்ளுங்கள்.
INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES

## முதலாமாண்டு நினைவஞ்சலி

மண்ணில் 04 . 04 . 1936



விண்ணில் 19 . 06 . 2007

### அமரர் கதிரிப்பிள்ளை சங்கரப்பிள்ளை

திதி: பஞ்சமி

ஆண்டு ஒன்று ஆகிடினும்
ஆறிடுமோ எங்கள் மனம்
நீங்கள் இல்லாத வாழ்வினை
நினைத்துப் பார்க்க முடிகிறதா?
துன்பக் கடலினிலே மூழ்கியே துவண்டு
துடிக்கின்றோம் துன்பங்கள் களைந்திடவே
துடுப்பாய் எங்களை வழி நடத்தும்
என் தந்தையே!
இனி எப்போ வருவீர் எமைக் காண?

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆலங்குழாய், சண்டிலிப்பாய். (76087)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீனஸ் விம்பிள்டன் சம்பியன்



லண்டன், ஜூலை 07

அக்காவுக்கு மகிழ்ச்சி...தங்கைக்கு ஏமாற்றம்! இதுதான் விம்பிள்டன் டெனிஸ் மகளிர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் அரங்கேறியது. அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய வீனஸ் வில்லியம்ஸ், செரீனாவை 7:5, 6:4 என்ற நேர் செற்களில் வீழ்த்தி 5ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப் பெற்ற விம்பிள்டன் டெனிஸ் தொடர் லண்டனில் நடைபெற்றுவருகிறது. நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதியாட்டத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த வீனஸ், செரீனா வில்லியம்ஸ் சகோதரிகள் மோதினர். ஏற்கனவே இருவரும் இரண்டு தடவைகள் (2002, 2003) விம்பிள்டன் இறுதியாட்டத்தில் மோதியுள்ளனர். இவற்றில் செரீனாவே பட்டம் வென்றார்.

இம்முறை நடப்புச் சம்பியனாகக் களமிறங்கிய 28 வயதான வீனஸ், முந்தைய தோல்விகளுக்குச் சரியான பதிலடி கொடுப்பார் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்டது. இதற்கேற்ப முதல் செற்றில் கடும் போட்டியைக் கொடுத்தார். இருவரும் மாறி, மாறி 'கேம்களை' கைப்பற்ற, ஆட்டத்தில் அனல் பறந்தது. தரவரிசைப் பட்டியலில் 7ஆவது இடத்தில் இருக்கும் வீனஸ் முதல் செற்றை 7:5 என்ற கணக்கில் அசத்தலாக வென்றார்.

இரண்டாவது செற்றில் இருவரும் விட்டுக் கொடுக்காமல் போராடினர். நீயா... நானா ஆட்டம் மீண்டும் தொடர்ந்தது. இரண்டாவது செற்றையும் 6:4 என வீனஸ் கைப்பற்றினார். சுமார் 111 நிமிடங்கள் நீடித்த போராட்டத்தில் வீனஸ் 7:5, 6:4 என்ற நேர் செற்களில் வென்று சம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார்.

புல்தரை களமான விம்பிள்டனில் வீனஸ் வில்லியம்ஸ் தனது ஆதிக்கத்தை மீண்டும் ஒரு முறை நிலைநாட்டினார். இரண்டு தடவைகள் தன்னை வீழ்த்திய செரீனாவுக்கும் பாடம் புகட்டினார். இவர் 5ஆவது முறையாக(2000, 2001, 2005, 2007,2008) இங்கு சம்பியன் பட்டம் வென்று சாதித்துள்ளார்.

# மேற்கிந்தியத் தீவுகளுடனான 4ஆவது போட்டி ஓர் ஓட்டத்தால் ஆஸ்திரேலியா 'திறில்' வெற்றி!



செயின்ட் கிட்ஸ், ஜூலை 07

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டியில், ஆஸ்திரேலியா ஓர் ஓட்ட வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா அணிகள் மோதிய நான்காவது ஒரு நாள் போட்டி செயின்ட் கிட்ஸில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது. முன்னதாக ஒருநாள் தொடரை 0-3 கணக்கில் இழந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆறுதல் வெற்றியை நோக்கி களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் ஜெயித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

ஆஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத்திலேயே டரன் பவல் அதிர்ச்சி கொடுத்தார். இவரது வேகத்தில், ஆஸ்திரேலிய தொடக்க வீரர்களான ஷோன் மார்ஷ்(16), ஷேன் வட்ஸன்(20) ஆகியோர் விரைவில் வெளியேறினர். பின்னர் வந்த மைக்கல் ஹசே 37 ஓட்டங்களையும், அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து ஆறுதல் அளித்தனர்.

5ஆவது விக்கெட்டில் சைமண்ட்ஸ், டேவிட் ஹசே ஜோடி பொறுப்புடன் ஆடியது. அதிரடியாக ஆடிய சைமண்ட்ஸ் 10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 87 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். டேவிட் ஹசே 51 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் ஒரு பவுண்டரியுடன் 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து கெய்லின் சுழலில் வெளியேறினார். ஆஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 282 ஓட்டங்களைக் குவித்தது.

சவாலான இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு, பிரட் லீ அதிர்ச்சி அளித்தார். முதல் ஓவரிலேயே சேவியர் மார்ஷலை (0), வெளியேற்றினார். இரண்டாவது விக்கெட்டுக்கு கெய்ல், சர்வான் ஜோடி சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தது. ஒருநாள் அரங்கில் தனது 27ஆவது அரைச் சதத்தை பதிவு செய்த சர்வான், 63 ஓட்டங்களுடன் பிரட் லீயிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தார். 6 பவுண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களை விளாசிய கெய்ல், 92 ஓட்டங்கள் குவித்து, சதமடிக்கும் வாய்ப்பை நழுவ விட்டார். மத்திய வரிசையில் சந்தர்போல், பிராவோ(31) பொறுப்புடன் ஆடினர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 275 ஆக இருந்த நிலையில், சந்தர்போல் 53 ஓட்டங்களுடன் பிரக்கனின் வேகத்தில் 'போல்ட்' ஆக மேற்கிந்தியத் தீவுகளுக்கு நெருக்கடி ஆரம்பித்தது.

கடைசி ஓவரில், 8 ஓட்டங்கள் சேர்க்க வேண்டிய நிலையில் ராம்டீன், சமி களத்தில் இருந்தனர். துல்லியமாகக் கடைசி ஓவரை வீசிய ஷேன் வட்ஸன் 6 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுக்க, 281 ஓட்டங்களை மட்டுமே சேர்த்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக அன்ட்ரூ சைமண்ட்ஸ் தெரிவானார்.

# அக்தர் மீதான தடை தற்காலிக நீக்கம்



கராச்சி, ஜூலை 07

அக்தர் மீதான 18 மாதத் தடையை லாகூர் உயர்நீதிமன்றம் தற்காலிகமாக நீக்கி உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம் அவர் பாகிஸ்தான் அணிக்காக விளையாட முடியும்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சொய்ப் அக்தர் ஆவார். கடிவாளம் இல்லாத குதிரை போல் செயல்படும் குணம் கொண்ட இவர் அவ்வப்போது சர்ச்சையில் சிக்கிக்கொள்வது உண்டு.

ஊக்க மருந்துப் பாவனை மற்றும் ஆஸிப்பை துடுப்பால் தாக்கியமை உள்ளிட்ட விவகாரங்களில் சிக்கிய அக்தர் வீரர்களின் நடத்தை விதிமுறையைத் தொடர்ந்து மீறியமையால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 5 ஆண்டு காலம் விளையாடத் தடைவிதித்தது. கடந்த ஏப்ரல் முதலாம் திகதி இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

தன் மீதான தடையை நீக்க வேண்டும் என்று கோரி அவர் லாகூர் உயர்நீதிமன்றில் கடந்த மாதம் மனுத் தாக்கல் செய்தார். நீதிமன்றம் இரு தரப்பினருக்கும் நோட்டீஸ் அனுப்பியது.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி அக்தர் மீதான தடையை நீக்க (சஸ்பெண்டு) உத்தரவிட்டார். விதிக்கப்பட்ட அபராதத்தை உடனடியாக செலுத்த அவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். தடை நீக்கப்பட்டதன் மூலம் அக்தர் இறுதித் தீர்ப்பு வரும் வரை பாகிஸ்தான் அணிக்காக விளையாட முடியும்.

இந்த வழக்கு கோடை விடுமுறைக்கு பின்னர் செப்டெம்பர் மாதத்தில் மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

## விளையாட்டு அரங்குகளில்

# ஹோல்டிங் விலகல்

லண்டன், ஜூலை 07

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகள் 2006ஆம் ஆண்டு டெஸ்ட் தொடரில் பங்கேற்றன. இத்தொடரில் ஓவலில் நடந்த நான்காவது போட்டியின் முடிவை மாற்றுமாறு தற்போது டுபாயில் நடந்த ஐ.சி.சியின் ஆண்டு கூட்டத்தொடரில், பாகிஸ்தான் வேண்டுகோள் வைத்தது. இதன் படி போட்டியின் முடிவை ஐ.சி.சி., வெற்றிதோல்வியின்றி முடிந்ததாக மாற்றி அறிவித்தது. இம்முடிவுக்கு ஐ.சி.சி., கிரிக்கெட் கமிட்டியில் உறுப்பினராக உள்ள, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மைக்கேல் ஹோல்டிங் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். இந்நிலையில் ஹோல்டிங், தனது உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

# இராணுவத்தின் ஆதரவு எப்போதும் எனக்கே; வெளிநாட்டுக்குத் தப்பி ஓடிவிட மாட்டேன்!

## முஷாரப் பரபரப்பு பேச்சு



கராச்சி, ஜூலை 07

"எனக்கு இராணுவத்தின் ஆதரவு எப்போதும் உண்டு. நான் வெளிநாட்டுக்கு தப்பி ஓடிவிட மாட்டேன்." - இவ்வாறு பேசியிருக்கின்றார் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்.

பாகிஸ்தானில் கடந்த பெப்ரவரி 18ஆம் திகதி நடந்த பொதுத்தேர்தலில் ஜனாதிபதி முஷாரப் ஆதரவு பெற்ற கட்சி தோல்வி அடைந்தது. பெனாஸிர் கட்சி தலைமையில் கூட்டணி ஆட்சி அமைந்துள்ளது. அதிலிருந்து கடந்த 5 மாதங்களாக, முஷாரப் பதவி நீக்கம் பற்றி பரபரப்பாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. அவர் வெளிநாட்டுக்கு தப்பி ஓடுவார் என்றும்அவரை இராணுவம் கைவிட்டு விட்டது என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், இந்தச் செய்திகளை எல்லாம் முஷாரப் முதல்முறையாக மறுத்துள்ளார். கராச்சியில் தொழில் அதிபர்கள் அளித்த விருந்தில் அவர்கலந்துகொண்டு பேசியவை வருமாறு:-

நான் கடந்த 3,4 மாதங்களாக அமைதியாக இருந்தேன். ஆனால், நான் பயந்து விடவில்லை. பயம் என்றாலே என்ன என்று எனக்குத் தெரியாது. அதை யாரும் எனக்குக் கற்றுக் கொடுக்கவும் இல்லை. எதிர்த்துத் தாக்குவதையும், தற்காத்து கொள்வதையும்தான் எனக்கு கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

நான் பதவி விலகி வெளிநாட்டுக்கு ஓடி விடுவேன் என்றும், இராணுவம் என்னைக் கைவிட்டு விட்டது என்றும் கூறி வருகிறார்கள். இப்படி கூறுபவர்கள், வதந்தியை பரப்புவர்கள் ஆவர். எனக்கு இராணுவத்தின் ஆதரவு எப்போதும் உண்டு. அது என் வாழ்நாளில் கடைசிவரை நீடிக்கும். என்னை இராணுவம் ஒருபோதும் கைவிடாது.

நான் எந்தத் தவறோ, பாவமோ செய்யவில்லை. எனவே, நான் பதவி விலக மாட்டேன். ஒரு வேளை பாகிஸ்தானின் பிரச்சினைகள் தீர்வதற்கு எனது ராஜினாமா உதவுமானால், அப்போது மட்டுமே நான் ராஜினாமாச் செய்வேன். அந்தச் சூழ்நிலையில், பதவி விலக ஒரு நாள் கூட எடுத்துக் கொள்ளமாட்டேன்.

நான் வெளிநாட்டுக்கு தப்பி ஓட மாட்டேன். பாகிஸ்தானில் நான் ஆற்ற வேண்டிய கடமை நிறைய உள்ளது. நிலையற்ற அரசு இருந்தால், தீவிரவாதத்தை ஒழிக்க முடியாது. பொருளாதாரத்தைச் சீரமைக்க முடியாது. எனவே, பாகிஸ்தானை தற்போதைய சிக்கலில் இருந்து விடுவிக்க, மற்றைய கட்சிகளுடன் இணைந்து நான் பாடுபட வேண்டியுள்ளது. இதற்காக, அனைத்துக் கட்சிகளும் கடந்த காலத்தை மறந்து என்னுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். பாகிஸ்தான் அரசு 5 ஆண்டுகள் நீடித்தால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

பாகிஸ்தானில் தலிபான் ஆதரவுத் தீவிரவாதிகளை ஒடுக்காவிட்டால், நாடு முழுவதும் 'லால் மசூதிகள்' பெருகி விடும். பழங்குடியினப் பகுதியில் தீவிரவாதிகள் மீது இராணுவம் எடுத்து வரும் நடவடிக்கையை நான் ஆதரிக்கிறேன். அங்குள்ள மக்கள் தீவிரவாதிகளைக் கைவிட்டு மிதவாதிகளை ஆதரிக்கத் தொடங்கி விட்டனர். பலுசிஸ்தானில் தீவிரவாத எண்ணம் பெருகுவது கவலை அளிக்கிறது. தீவிரவாதிகளைக் கண்டு பயம்கொள்வதை விட்டு விட்டு, இரும்புக்கரம் கொண்டு அவர்களை ஒடுக்க வேண்டும். - இவ்வாறு முஷாரப் கூறினார்.

# ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் ஈராக்கில் இருந்து படை வாபஸ்

## ஒபாமா மீண்டும் அறிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 07

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பாரக் ஒபாமா, ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளை வாபஸ் பெற வேண்டும் என்ற கொள்கை உடையவர். சமீபத்தில் இதை அவர் பகிரங்கமாக அறிவித்தபோது குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோன் மெக்கெய்ன் எதிர்ப்புத் தெரிவித்தார். உடனே நிருபர்களை அழைத்த ஒபாமா, ஈராக் சென்று நிலைமையை ஆய்வு செய்தபிறகு இதுபற்றி முடிவு செய்வேன் என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து ஒருமணி நேரம் கழித்து மீண்டும் நிருபர்களை அழைத்த ஒபாமா அவர்களிடம் கூறியவை வருமாறு:-

ஈராக்கில் இருந்து படைகளை உடனடியாக வாபஸ் பெறுவது என்ற எனது கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை. நான் பதவி ஏற்ற முதல் நாளிலேயே ஈராக் போரை முடித்துக் கொள்ளுமாறு இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிடுவேன். இது ஓராண்டுக்கு முன்பே எடுத்த முடிவு. நான் கொள்கையை மாற்றிவிட்டேன் என்று எதிர்க்கட்சி பொய்ப்பிரசாரம் செய்கிறது. - இவ்வாறு அவர் கூறினார்.

# வீதியில் சென்றோர் மீது மர்ம நபர் துப்பாக்கிச் சூடு அமெரிக்காவில் பயங்கரம்; நால்வர் பரிதாபப் பலி!

மில்வாக்கி, ஜூலை 07

அமெரிக்காவில் தெருவில் சென்று கொண்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் மீது மர்ம மனிதன் சரமாரியாகச் சுட்டதில் 4 பேர் பலியாகினர். 2 பேர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்காவின் மில்வாக்கி நகரில் இரவு சனநடமாட்டம் அதிகமாக இருக்கும். நேற்று முன்தினம் இரவு 2.30 மணியளவில் 100 இற்கும் மேற்பட்ட மக்கள் அந்தத் தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த ஒரு மர்ம மனிதன் திடீரெனத் துப்பாக்கியால் கூட்டத்தினரை நோக்கி சரமாரியாகச் சுட்டான். மக்கள் பதறியடித்துச் சிதறி ஓடினர். இதில் குண்டு பாய்ந்து 2 பெண்கள் உட்பட 4 பேர் அதே இடத்தில் பலியாகினர்.

அவர்களுக்கு 23 முதல் 34 வயது இருக்கும். மேலும் 2 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் சில்வியா என்ற பெண் தனது 35 ஆவது பிறந்தநாளை இரவு விடுதியில் கொண்டாடிவிட்டு வீட்டுக்குத் திரும்பிய [illegible] பாய்ந்தது. சுட்டவர் யார், அவர் மனநோயா[illegible] பொலிஸார் தேடி வருகின்றனர்.

# திரைப்படமாகிறது மண்டேலா வாழ்க்கை

லொஸ்ஏஞ்சல்ஸ், ஜூலை 07

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா பற்றி ஹொலிவூட்டில் திரைப்படம் தயாரிக்கப்படுகிறது. ஒஸ்கார் விருதுபெற்ற நடிகர் மோர்கன் ப்ரீமன் இப்படத்தைத் தயாரிக்கிறார். அவரே மண்டேலா கதாபாத்திரத்தில் நடிக்கிறார். ஜோன் கர்லின் என்பவர் எழுதிய மண்டேலா பற்றிய புத்தகத்தின் அடிப்படையில் இப்படம் எடுக்கப்படுகிறது.

இதில் மண்டேலா தென்னாபிரிக்க ஜனாதிபதியாகப் பதவிவகித்த முதல் ஆண்டில் அவரது பொது வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் நடந்த சம்பவங்கள் இடம்பெறும். அடுத்த ஆண்டுதொடக்கத்தில்படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரும்புலிகள் தினமான கடந்த சனிக்கிழமையன்று, முதல் கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருவப்படத்துக்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வன்னியில் ஈகச்சுடர் ஏற்றி, மலர்மாலை சூட்டி வணக்கம் செலுத்தினார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் 356 கரும்புலி மாவீரரின் திருவுருவப் படங்களுக்கு, திருமதி மதிவதனி பிரபாகரன், கட்டளைத் தளபதிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள், கரும்புலிப் படையணிப் போராளிகள் மற்றும் போராளிகள் ஈகச்சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினர்.

## வட்டக்கச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்பி (வயது-76) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

ச.சூரியகுமார் (சங்கர்), இராமலிங்கம் மற்றும் கிராம சேவையாளர் ரூபசிங்கம் ஆகியோரின் வீடுகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. 15 வீடுகள் சிறு சேதங்களுக்குள்ளாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்று 56 ஆசனங்களை உடைய இடதுசாரிக் கட்சிகள் அறிவித்துள்ளன. எனினும் இடதுசாரிகள் மத்திய அரசுக்கு அளித்துவரும் ஆதரவை திரும்பப் பெற்றால் காங்கிரஸூக்கு தாம் ஆதரவளிப்பதாக சமாஜவாஜ கட்சி நேற்று உறுதி அளித்தது.

இதற்கிடையில் தேவகவுடாவின் மதச் சார்பற்ற ஜனதா தளத்தின் ஆதரவைப் பெறுவதற்கும் காங்கிரஸ் அரசு முயற்சிப்பதாக பிந்திய தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கொண்டிருந்த சிறப்பு அதிரடிப்படையினரே பொறிவெடியில் சிக்கினர் எனக் கூறப்படுகிறது.

இதில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

## மிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3.30 மணியளவில் புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் கூடவிருந்த ஒரு கூட்டத்தின் மீதே இத்தாக்குதலை அந்த விமானம் நடத்தியதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் திரும்பி வந்து ஜெற் தரையிறங்கிய போது, அதன் சக்கரத்தில்ஏறபட்ட சிக்கல்காரணமாகஅது ஓடுபாதையை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளானது எனப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் அந்தக் குண்டுவீச்சு விமானத்துக்கு ஏற்பட்ட முழுமையான சேத விவரங்கள் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவரவில்லை. (உ)

## ஓட்டோச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயத்துக்கு முன்பாக ஓட்டோவை நிறுத்தி விட்டு நண்பர்களுடன் கதைத்துக்கொண்டு நின்றார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் இருவர் வருவதை அவதானித்த பிரஸ்தாப இளைஞர் ஓடினார். கலைத்துச் சென்ற ஆயுததாரிகள் இளைஞனின் வீட்டுக்கு அருகில் உள்ள பற்றைக்குள் வைத்து அவரைச் சுட்டுவிட்டுத் தப்பி விட்டனர்- என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகள் இன்று இடம்பெறும் எனத் தெரிவித்த நீதிவான் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (அ-1)

## இலங்கை...

இது குறித்து நாடாளுமன்றக் குழுவை நியமிக்க விடயத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் உறுதி அளித்திருந்த போதும் அது இது வரை நிறைவேற்றப் படவில்லை என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். இதேவேளை- நாடாளுமன்றக் குழுபற்றி நாம் ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே குறிப்பிட்டிருந்த போதிலும், அந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரும் அமைதியாக இருந்து விட்டு தற்போது ஒப்பந்தத்தை காலந்தாழ்த்துமாறு தெரிவிப்பதாக பெற்றோலியத்துறை அமைச்சர் பௌசி கூறினார்.

## ஐ.தே. கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலை நிறுத்தத்தில் குதிப்பர் என்று ஐ.தே. கட்சி நேற்றுத் தெரிவித்தது.

இப் போராட்டத்திற்கு அரசிடமிருந்து உரிய பதில் கிடைக்காவிட்டால் நாட்டு மக்களை வீதியில் இறக்கித் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தப் போவதாகவும் அக்கட்சி எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் பிரதம கொறடாவும் எம்.பியுமான ஜோஸப் மைக்கல் பெரேரா கூறியவை வருமாறு:-

தொழிலாளர்கள் சம்பளத்தை 5 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்குமாறு கோரி ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கங்கள் இந்த வாரம் 10 ஆம் திகதி வேலைநிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

7 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் கோரிக்கை. இருப்பினும், ஆகக் குறைந்தது 5 ஆயிரம் ரூபாவேனும் வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உடன்படுகின்றோம்.

இந்தப் போராட்டத்தை யார் ஒழுங்கு செய்தார்கள் என்பது பற்றி எமக்குப் பிரச்சினையில்லை. என்ன நோக்கத்திற்காக ஒழுங்கு செய்தார்கள் என்பது பற்றித்தான் பார்க்கவேண்டியுள்ளது என்றார்.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே. கட்சி எம்.பியும் ஐ.தே.கட்சி சார்பு தொழிற்சங்கங்கள் அனைத்தையும் ஒன்றிணைக்கும் தேசிய ஊழியர் சங்கத்தின் தலைவருமான ஜோர்ன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியவை வருமாறு:-

அரசு யுத்தத்தைக் காரணங்காட்டி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இருந்து விலகிக் கொள்ள முற்படுகிறது. வேலைநிறுத் தம் செய்வதற்குப் பொருத்தமான நேரம் இது வல்ல என்று அரசு கூறுகிறது.

இந்த வேலைநிறுத்தம் யுத்த வெற்றிக்குப் பாதகமாக அமையும் என்றும் அரசு கூறுகிறது. இது மக்களை ஏமாற்றும் செயல். அரசின் இந் தக் கூற்றை மக்கள் நம்பத் தயாராக இல்லை -என்றார்.

## கொழும்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரித்து நிற்கும்.

அவற்றிலிருந்து கண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

அச்சமயத்தில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் இந்தியத்தரப்பின் கவனத்துக்குக் கொண்டுவராமல் எந்த வான் பறப்பும், கடல் நகர்வும் முன்னெடுக்கப்பட முடியாமல் கெடுபிடி இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியப் பிரதமர் மற்றும் அதிதிகளின் நலனுக்காக முழு 'தாஜ் சமுத்திரா' ஹோட்டலையும் இந்தியத் தூதரகம் வாடகைக்கு அமர்த்தித் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும். இதற்கான பதிவுகள், ஒழுங்குகள் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டன.

### ஹெலிகள் தயார் நிலையில் நிற்கும்

எத்தகைய நெருக்கடியையும் எதிர்கொள்ளத் தயாரான நிலையில் இந்தியத் தரப்பின் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் கட்டுநாயக்கா விமானத் தளத்திலும், மற்றொரு ஹெலி கொழும்பில் இராணுவத் தலைமையகத்துக்கு அருகிலும் நிறுத்தப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதைவிட குண்டுதுளைக்காத வாகனங்கள் மற்றும் கருவிகள் போன்றவையும் இந்தியத் தரப்பின் பாவனைக்காகக் கொழும்புக்குக் கொண்டு வரப்படவிருக்கின்றன.

இந்த உச்சி மாநாட்டுக்காகக் கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் கொழும்பில் எவ்வளவு காலத்துக்குத் தங்கியிருப்பார் என்பது, மாநாடு நெருங்கும் சமயத்தில் இலங்கையின் பாதுகாப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டே தீர்மானிக்கப்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

### பாதுகாப்பு நிலைமையைப் பொறுத்தே...

பாதுகாப்பு நிலைமை மோசமாக இருந்தால், உச்சிமாநாட்டின் முக்கிய நிகழ்வின்போது மாத்திரம் மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடியதாக இந்தியப் பிரதமர் காலையில் வந்து அன்று மாலையே திரும்பிவிடுவார் என்றும் கூறப்பட்டது.

ஒரு முழு நாளுக்கு மேற்பட்ட காலத்துக்கு இந்தியப் பிரதமர் கொழும்பில் தங்குவாராயின் அவர் இங்கு கொழும்பு அரசுத் தலைவர்களைத் தவிர, பிற அரசியல் தலைவர்களையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனும் அடங்குகின்றார் என்றும் அந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## சார்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இந்தியாவின் முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இலங்கைப் பாதுகாப்பு ஒழுங்கமைப்பில் அரச தலைவரின் பாதுகாப்புப் பிரிவு, பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவு, முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பிரிவு, சிறப்பு அதிரடிப்படை, குற்றப்புலனாய்வுப் பிரிவு ஆகியன பாதுகாப்பை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சில அதிகாரிகள் பாதுகாப்பு முன் ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொருட்டு கொழும்பை வந்தடைந்துள்ளனர்.

இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் தங்கும் பொருட்டு கொழும்பில் உள்ள நட்சத்திர விடுதிகள் இரண்டு எதிர்வரும் 20ஆம் திகதியில் இருந்து இரு வாரங்களுக்கு முழுமையாக முன்பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தகவல்கள்தெரிவிக்கின்றன.

இதனிடையே இந்தியத் தலைவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னிட்டு இந்தியப்புலனாய்வுத்துறையைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள் சிலர் ஏற்கனவே வந்துள்ளனர் என ஸ்ரீலங்கா பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 பாதுகாப்பு அதிகாரிகளும் இலங்கை வரவுள்ளனர். (உ)


2008 A/L & DAY Batch
CHEMISTRY M.C.Q TEST
11.07.2008 Fri
11.00-1.00
NEW SCIENCE HALL
BEACON,
VATHIRI
By. K.SIVATHIRAN
B.sc (Hons)

பரீட்சை வினாத்தாள்
கொழும்பு கல்வி வளவாளர் நிலையம் நடத்திய முன்னோடிப் பரீட்சை 2008
PHYSICS
கிடைக்கும் இடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை,
நாவலர் இன்சிரியூட்
ஆனைப்பந்தி.

CHEMISTRY
Group Class
ஓட் சிரேற்றமும் தாழ்த்தலும்
செவ், புதன் - 4.30 pm
DIAS Bsc (Hons)
College of Chemistry
பழம் Rd, கந்தர்மடம்

உள்நாடு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
யாழ்மாவட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்
கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
குறிப்பு:- அனுப்பப்படும் ஒவ்வொரு பொதிகளிற்கும் காப்புறுதி உண்டு

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கான புதிய சித்திரத்தேர் ஆரம்ப விழா
2008.07.09 ஆம் திகதி காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரையுள்ள சுபவேளையில் விநாயகப் பெருமானுக்கு விஷேட அபிஷேகம் நடைபெற்று புதிய சித்திரத்தேருக்கான ஆரம்ப நிர்மாணங்கள் நடைபெறும்.
அதைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.
இத் திருப்பணிக்கு உதவ விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
கந்தையா திருலோகநாதன்
(பொருளாளர்)
புதிய தேர் திருப்பணிச்சபை,
இல. 310 A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021222 2523

2008A/L வரலாறு
மாபெரும் கருத்தரங்கு
2008 க.பொ.த உயர்தரத்தில் வரலாறு பாடத்தில் தோற்றுபவர்களுக்கான பயனுள்ள கருத்தரங்கு.
யாழின் முன்னணி வரலாற்று பட்டதாரி ஆசிரியர்களான
M. சத்தியன் S.சுஜிகரன்
M. பத்மன் S.S.தாசன்
ஆகியோரின் ஒன்றிணைந்த சேவை
காலம்:-10.07.2008 வியாழன் மற்றும் 11.07.2008 வெள்ளி
நேரம்:- காலை 8.00 -பி.ப 4.00 மணிவரை
இடம்:- DMI, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
கட்டணம் - 150ரூபா.

Your Best Chance
மாணவர்களிற்கு அதிவிசேட சலுகை!
பாவித்த கணனிகள் (Dell Moniter 17")
குறைந்த விலைகளில்.
திருமுருகன் கொம் நெற்


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்னை மடியில் 12★08★1929

அனைவரும் நெகிழ 05★06★2008

கடந்த 05.06.2008 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் கார்த்தி பொன்னையா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.07.2008) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.